Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU


Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2809)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 266

அவசியம் 03



இரை 06



சிறப்புத்தான் 08



மிக மெல்லிய 12



பின் தள்ளினார் 18



# தெரிவுக்குழுவில் இடமில்லை; முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை திருத்துவது குறித்து ஆராய அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவிக்குழுவில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய சிறுபான்மைக் கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இடமளிக்கப்படாதது குறித்து அந்தக் கட்சியினர் மத்தியில் அதிருப்தி எழுந்துள்ளது.

இது குறித்து கல்முனையில் கூட்டமொன்றில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முக்கிய சிறுபான்மைக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸை புறக்கணித்து விட்டு இந்த நடைமுறைகளில் முஸ்லிம்களும் உரிய பங்களிப்பை பெற முடியாது என்று தமிழோசையிடம் தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான ஹசன் அலி சில வேளைகளில் அடுத்த கட்டமாக அரசாங்கத்தினால் உறுப்பினர்கள் அறிவிக்கப்படும் போது அதில் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடமளிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றுவதற்காக இந்த தெரிவுக்குழு அறிவிக்கப்பட்டதாக ஒரு புறம் கூறப்பட்டாலும், அது இனப் பிரச்சினை தீர்வுக்கானது என்று மறுபுறம் கூறப்படுவதால், அந்த தெரிவுக்குழு அமைக்கப்படுவதற்கான நோக்கம் குறித்து குழப்பம் நிலவுவதாகவும் ஹசன் அலி குறிப்பிட்டார். அதேவேளை 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள வற்றை குறைப்பதற்கான நோக்கில் அந்த தெரிவுக்குழு அமைக்கப்பட்டால் அதனை தமது கட்சி கடுமையாக எதிர்க்கும் என்றும் ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார்.

## தன்சானியா செல்கிறார் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்தவாரம் தன்சானியாவுக்கு ஐந்து நாள் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி தன்சானியா செல்லும் ஜனாதிபதி வரும் யூலை முதலாம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார். இலங்கையின் ஜனாதிபதி ஒருவர், ஆபிரிக்க நாடான தன்சானியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.




(படம் : கிரன் 05)

## மாகாண மட்ட சித்திரப் போட்டி மல்லாகம் மாணவி 2ஆம் இடம்



மல்லாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தரம் ஒன்றில் கல்வி கற்கும் மாணவியான கஜேந்திரன் வைஷ்ணவி வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுப் பாடசாலைக்கு புகழ்சேர்த்துள்ளார்.

இவர் கோட்ட மட்டம் மற்றும் வலய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றுள்ள நிலையில் மாகாண மட்டத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையில் சுமார் அறுபத்தைந்து மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## நடைமுறைச் சாத்தியத்தின் மூலமே அரசியல் உரிமையை பெறலாம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நடைமுறைச் சாத்தியமான வழியில் எமது மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது அரசியல் உரிமையையும் வென்றெடுக்க முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைச்சரின் செயலகத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்தோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் அதேவேளை, அரசியல் உரிமைகளையும் வென்றெடுப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான வழிமுறையே சரியானது என்பதை நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

நாம் எதைச் சொல்கின்றோமோ அதையே செய்து வருகின்றோம். அதேபோன்று எதைச் செய்து வருகின்றோமோ

19 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தளை புதைகுழி விசாரணை சுயாதீனக் குழு நடத்த வேண்டும்

### காணாமற்போனோர் உறவினர் கோரிக்கை

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவை இரத்துச் செய்து விட்டு, அரச சார்பற்ற சுயாதீன குழுவொன்றின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்தப் புதைகுழி தொடர்பில் நீதி கோரும் காணாமற் போனோரின் உறவினர்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன். மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பிலான உண்மைகள் வெளிவருவதைத் தடுப்பதற்காகவே ஜனாதிபதி சிறப்பு ஆணைக்குழு அமைத்துள்ளதாக காணாமற் போனோரின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

## 26 ஆயிரம் சீனப்பிரஜைகளுக்கு ஒரு வருடத்தில் நுழை விசா

### அரசாங்கம் தெரிவிப்பு

இலங்கையில் கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஏழு ஆண்டுகளில் 26 ஆயிரம் சீனப் பிரஜைகளுக்கு தொழில் நுழை விசா வழங்கப்பட்டுள்ளதாக, நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அளித்த பதிலிலேயே இது தொடர்பான புள்ளி விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

2005 ஆம் ஆண்டில் ஆயிரத்து 517 பேருக்கும், 2006 ஆம் ஆண்டில் ஆயிரத்து 698 பேருக்கும், 2007 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 179 பேருக்கும், 2008 ஆம் ஆண்டில், 3 ஆயிரத்து 493 பேருக்கும், 2009

19 ஆம் பக்கம் பார்க்க

## சமூக அபிவிருத்தி அலுவலர்களாக பட்டதாரி பயிலுநர்கள் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பட்டதாரி பயிலுநர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சு சமூக அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு நியமித்துள்ளது.

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொழும்பில் செத்சிறிபாயவிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா வழங்கவுள்ளார்.

கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த வி.சுசீலா கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மறவன்புலோ மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த இ.சுபாசினி பூநகரி பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைவீதி நல்லூரைச் சேர்ந்த எஸ்.சுமதி பளை பிரதேச செயகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குடமியன் வரணியைச் சேர்

19 ஆம் பக்கம் பார்க்க

# சகலரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் பாடசாலைகள் விரைவாக அபிவிருத்தியடையும்

## – யாழ்.வலய கல்விப் பணிப்பாளர்

(திருநெல்வேலி)

ஒரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அப்பாடசாலைக்கான தேவைகளும் அதிகரிக்கும். கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களை கொண்டதாக இருந்தும் மிகக் குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சியைக் கண்ட இப்பாடசாலையின் நிலையைக் கண்ட நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய பரிசில் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதிபர் கு.திலீபன் தலைமையில் வித்தியாலயபிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

கல்விப் பணிப்பாளர், தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,


பெரும்பாலான பாடசாலைகளில் இரண்டு குழுக்கள் இருக்கும். ஒன்று அதிபர்களுக்கு ஆதரவாகவும். மற்றையது அதிபருக்கு எதிராகவும் காணப்படும்.

இதனால் பாடசாலையின் வளர்ச்சி மட்டுமல்ல, மாணவர்களின் கல்வியும் பின்னடைவைக் காணும். ஆனால் இந்தப் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சபையினர் என சகலருமே ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்படுவதைக் காணமுடிகின்றது. அதிபரின் திறமை மிக்க செயற்பாடே இதற்குக் காரணமாகும்.

எதிர்காலத்தில் இப்பாடசாலைக்கு பல வளங்கள் கிடைக்கவுள்ளன. அடுத்த மாதமளவில் சுகாதாரத் தொழிலாளரி ஒருவரும், காவலாளி ஒருவரும் நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் கலந்து கொண்டார். நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி அன்ரன் சவரிமுத்து ஆகியோரும் உரையாற்றினர். நந்தினி உதயகுமார், பரிசில்களை வழங்கினார் அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## திருப்பாதம் பணிந்தோம்!



திரு என்ற நாமம் சூடியே-திருமுருகா
உன் வாசல் வந்து அழுதோம்-ஐயா
திருபாற்கடல் அருகே-கந்தவனநாதனாய்
திருவிளையாடல்கள் காட்டி அருள்செய்பவனே
தீர்த்தமாடி உளமாரப் போற்றினாலே
தீர்ந்துவிடும் வினையெல்லாம்-தீர்த்தக்கரையினிலே
திண்ணை கூட இல்லா வாழ்வும் -எத்தி
திரியும் சில தமிழர் வாழ்வும் இனி வேண்டாம்
திருப்பாதம் பணிந்து கேட்கின்றோம்-ஒருகணம்
திரும்பி பாருமையா, பன்னிருவிழியாலே.

பொலிகண்டி கல்யாண வேலவன் ஆலய தீர்த்த திருவிழா இன்றாகும்.

பொலிகையூர்
கே.கே.விசிந்தன்



யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை (777) வழிப்பாதையைக் கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று யாழில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் போது மண்கும்பான் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நேற்று பாதையை விட்டு விலகி மதகு ஒன்றினை உடைத்துக் கொண்டு விபத்துக்குள்ளானது. இதில் பத்திற்கு மேற்பட்டோர் சிறு காயங்களுக்குள்ளானர்கள். அதனை மீட்க வந்த இலங்கை போக்குவரத்து பொறியியல் சேவைப் பிரிவின் வாகனமும் சேற்றில் புதையுண்டு காணப்படுவதைக் காணலாம். (21)

## முட்டை விலை திடீர் உயர்வு

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் தற்போது உள்ளூர் பெரும் ஆலய உற்சவங்கள் நிறைவடைந்த நிலையில், முட்டை தற்போது 20 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

உற்சவகாலத்தில் வர்த்தக நிலையங்களில் முட்டைகள் தேங்கி இருந்த நிலையில் தற்போது திடீர் விலை உயர்வு அடைந்துள்ளமையைக்காணக்கூடியதாக உள்ளது. (150)

## திறந்த பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானத்தில் அத்திவார சான்றிதழ் கற்கை நெறிக்கான (Foundation Certificate in Science) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் எத்தனை தடவைகளிலேனும் 3 சித்திகளைக் கொண்டிராதோர் இக்கற்கை நெறியினைப் பின்பற்றுவதன் மூலமாக விஞ்ஞானப்பட்டமாணி நெறியினைத் தொடர முடியும்.

ஆர்வமுள்ளோர் விண்ணப்பங்களை 17.06.2013 இல் இருந்து 17.07.2013 வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இலவசக் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதன் மூலமாக இச்சான்றிதழ் கற்கைநெறி பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## சேவை ஓய்வு

இலங்கை வங்கியின் அதிமேற்தரக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய திருச்செல்வம் ஜேசுதாசன் கடந்த பத்தொன்பதாம் திகதி முதல் மேற்படி பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் கடந்த 37 வருடங்களாக வங்கியில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். (54)

## பௌர்ணமி உற்சவம்

சாவகச்சேரி கல்வயல் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய பௌர்ணமி உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று விசேட பௌர்ணமி பூசைகள் இடம்பெறும். அத்துடன் தீபாராதனை, அர்ச்சனை என்பன இடம்பெற்று பூரண புட்கலா சமேதரராக ஐயப்பன் வீதியூலா வருவர்.

ஆலய தர்மகர்த்தா சு.சிவானந்ததன் ஐயா தலைமையில் இவ் உற்சவம் இடம்பெறவுள்ளதோடு மகேஸ்வர பூசையும் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (இ)

## புனித இரவு

முஸ்லிம்களின் ஷஹ்பான் மாதத்தில் வரும் புனித இரவு 'பராத்' இன்றாகும்.

இன்று சகல பள்ளிவாசல்களிலும் யாஸீன் ஓதுதல் (பயான்) மார்க்க பிரசங்கம் நடைபெறும்.

அத்துடன் இனிறிலிருந்து 3 நாட்களுக்கு (ஷஹ்பான் பிறை 14, 15, 16) நோன்பு நோற்பது சுன்னத்தாகும்.

எதிர்வரும் ரம்ழான் மாதத்தில் 30 ஆவது நோன்பு நோற்பது கடமையாகும். (105)


### தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி, பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு 06 மாத காலத்திற்குள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

தகைமை : NCT (Civil)
அனுபவம் : கட்டட நிர்மாணத்துறையில் 3 வருடங்களுக்கு குறையாத வேலை அனுபவம்.
அமைவிடம் : வெலிக்கண்டல் சந்தியில் அமைந்துள்ள கிளி. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் வெல்ல நிலையக் கட்டட மீள் நிர்மாணம்.
சம்பளம் : நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரி தனது சுய விபரங்களைப் பூரணப்படுத்தி 03.07.2013 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர்/பொது முகாமையாளர் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ஏ-9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கூட்டுறவு சேவையில் உள்ள
மா.மாயழகு
தலைவர்,
களிநொச்சி பனை தென்ன வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.

(C2865)



### சிறு விளம்பரம

வேலைவாய்ப்பு
மலேசியாவில் பல்வேறுபட்ட துறைகளில் வேலை வாய்ப்பு. ரீவி கொம்பனி, கார் கொம்பனி மற்றும் பல கொம்பனிகளில் உடனடி வேலை வாய்ப்பு தொடர்புகளுக்கு: 077 918 1018. (R193)



## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 163 | திகதி 2013.06.21 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்: 02 07 39 40 W (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 12,592,640/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 187 | 187,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 358 | 358,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8474 | 508,440/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4428 | 177,120/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 112260 | 2,245,200/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16455 | 329,100/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 12,592,640/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,154,860/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,812,120/-

2013.06.25ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் [illegible] கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய


வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C2863)
(C/2843)

# உலகளாவிய ரீதியில் தமிழ்மொழியை செம்மொழியாக்கியவர் தனிநாயகம் அடிகளார்

## யாழ்-பல்கலை முகாமைத்துவபீடத் தலைவர்



(யாழ்.நிருபர்)

உலக அரங்கில் எம் தாய் மொழியாம் தமிழ்மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைக்க வழிவகுத்தவர் தனிநாயகம் அடிகளாவார் அவரது பிறந்த ஊரான நெடுந்தீவில் அடிகளாருக்கு விழாவெடுப்பது போற்றுதற்குரியது.

இவ்வாறு நெடுந்தீவு தேவ கலாசார மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவபீடத் தலைவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவருமான பேராசிரியருமான தி.வேல்நம்பி குறிப்பிட்டார்.

யாழ்.மறை மாவட்ட தனிநாயகம்அடிகள் நூற்றாண்டு விழாதுணைத்தலைவர் அருட்கலாநிதி A.F.Xஜெயசேகரம் அடிகள் தலைமையில் தேவ கலாசார மண்டப தனிநாயகம் அடிகள் வெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில், யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்ட நெடுந்தொலைவில் அமைந்துள்ள இந்த நெடுந்தீவுக் கிராமத்தில் நல்லதொரு கட்டமைப்பு காணப்படுகிறது. கலைகள் வளர்கின்றன. கலாசாரம் பேணப்படுகிறது. இந்த அறிஞரின் விழாவிற்கும் பெருந் தொகையான மக்கள் திரண்டிருக்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்து பேணப்பட்டால் நெடுந்தீவில் இன்றும் பல தனிநாயகம் அடிகள் தோன்றுவார்கள்.

கைலாசபதி, சிவத்தம்பி போன்று ஒப்பியல் இலக்கியத்தின் ஊடாக செம்மொழி அந்தஸ்து பெற்றுள்ள சில மொழிகளில் தமிழ்மொழியையும் இடம்பெறச் செய்தார். நான்கு தடவைகள் பல்வேறு நாடுகளில் உலகத் தமிழராய்ச்சி மாநாடுகளைச் சிறப்பாக நடத்திய தமிழின் பெருமையை உலகறியச் செய்தார்.

உலகம் முழுவதும் அடிகளாரின் பெயரில் தமிழ் வளர்கிறது, எமது நாட்டிலும் தமிழை வளர்க்க இளைய தலைமுறையினரிடையே தமிழ்ப் புலமையாளர்கள் உருவாக ஆசிரியர்களும், பெற்றோரும் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்.

வீடுகள் தோறும் கலையின் ஒளி திகழவேண்டும். பாடசாலைகள் தோறும் தமிழைக் கற்று புரிந்துகொள்ள தமிழ்ச்சங்கங்கள் உருவாக வேண்டும். மாதத்தில் ஒருதடவையாவது தமிழ்ச் சங்கங்கள் கூடி தமிழை வளர்க்கவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளைத் தமிழ் மொழி மூலமான கலைநிகழ்வுகளில் மேடையேற ஊக்குவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)

# நோய்த்தாக்கமற்ற மிளகாய்ப்பயிர் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி, தம்பாலை, கதிரிப்பாய் போன்ற பகுதிகளில் கடந்த தை மாத போகத்தில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்ப்பயிரானது தற்போது நல்லநிலையில் நோய்த்தாக்கமின்றிக் காணப்படுவதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

எனினும் இவர்கள் தமது மிளகாய் பயிருக்கு கிருமிநாசினிகளை விசிறியும் உரத்தைப் பயன்படுத்தியும் வருகின்றனர். இதனால் அவை நல்ல பிஞ்சு பூக்களுடன் பயன் தரக் கூடிய நிலையில் செழிப்பாக இருப்பதாகவும் கூறுகின்றனர். சிலர் காய்களைப் பிடுங்கி சந்தையில் விற்பனை செய்கின்றனர்.

அதாவது ஒரு கிலோ 90-110 ரூபா வரை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகிறது. சிலர் காய்களைப் பிடுங்காது முற்றிப் பழுத்த பின்னர் பிடுங்கி காய வைத்து செத்தல் மிளகாயாக்குகின்றனர்.

எனினும் செத்தல் மிளகாயின் விலை தற்போது 150-250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவர்கள் நல்ல இன மிளகாய் விதைகளை நாற்று மேடையில் விதைத்து நல்ல முறையில் அவற்றை பராமரித்து தமது விவசாய நிலங்களில் இவற்றை நாட்டிப் பயன்பெறுகின்றனர். (85)


# சங்காபிஷேகம்

(கல்வயல்)

சாவகச்சேரிநகர், கச்சாய் வீதி கோயிற்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஞான வீரபத்திரசுவாமி ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்காபிஷேக விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தினமும் காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரையும் மாலை 6 மணி முதல் 8.30 மணிவரையும் பூசைகள் இடம்பெறவுள்ளன.

# சமுர்த்திக் கல்விப் புலமைப்பரிசில்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு சமுர்த்தி கல்விப் புலமைப்பரிசில் வைபவ ரீதியாக பிரதேச செயலரினால் வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

இன் நிகழ்வு ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை பாடசாலையின் அதிபர் திரு.கருனாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலையின் வறிய 42 மாணவர்களுக்கு சமுர்த்தி கல்விப் புலமைப் பரிசில்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தினோஸ்குமாரினால் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினராக முல்லைமாவட்ட ஜனாதிபதி இணைப்பாளர் ச.கனகரத்தினம் பிரதேச செயலக உதவி திட்டப் பணிப்பளர் முகுந்தன் அகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (40)

# விழிப்புணர்வு ஊர்வலம்



(ஊர்காவற்றுறை)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் மக்களோடு இணைந்து தெரிவு செய்யப்பபட்ட குளங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் போன்ற செயற்பாடுகளுடன் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி பவனியுடன் கூடிய விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது.

இவ்விழிப்புணர்வு ஊர்வலம் பொது பஸ் தரிப்பிடத்திலிருந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முன்றல் வரை நடைபெற்றதுடன் இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் சபை உறுப்பினர்கள் சுற்றாடல் அலுவலகர்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களால் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் அநாவசியமான நுகர்வினை கைவிடுவோம் என்னும் கருப் பொருளில சுற்றாடல உத்தியோகத்தர் செல்வி எஸ்.சுதாமதியால் கருத்துரை வழங்கப்பட்டதுடன் விழிப்புணர்வு அடங்கிய துண்டுப்பிரசுரமும் பிரதேச சபையால் வழங்கப்பட்டது. (65)

# குப்பைகளால் சுகாதார சீர்கேடு நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(அரியாலை)

அரியாலை மாம்பழச் சந்திப் பகுதியில் பிரதான வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட குறுக்கு வீதியில் வேலிக்கரையோரமாக கைவண்டிகளில் கொண்டு வந்து குப்பைகள் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாக குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனா.

இதேவேளை இவ்வாறு கொட்டப்படும குப்பைகள் உரிய முறையில் அள்ளப்படுவதில்லை எனவும் அவ்விடத்தில் வைத்து கொழுத்தப்படுவதாக தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இதனால் சூழல் வெகுவாக மாசடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இப்பகுதியில் இவ்வாறு சுகாதாரமற்ற நடவடிக்கைகளால் மக்கள அதிகம் பாதிக்கப்படுவதாகவும் இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். (23)

# பாடசாலைகளுக்கு முன்பாக மஞ்சள் கடவை அவசியம்


## பொது மக்கள் வேண்டுகோள்

(கல்வயல்)

பருத்தித்துறை வீதி காபெற் வீதியாக மாற்றமடைந்து வரும் நிலையில் வீதிகளுக்கு காபெற் இடப்பட்டு நீண்ட நாட்களாக வீதிக் குறியீடுகள் போடப்படாமையால் பயணிகள சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நீர்வேலியை அண்டிய பிரபல பாடசாலைகள் இவ்வீதிப்பகுதியிலே அமைந்துள்ள நிலையில் இப்பாடசாலைகளுக்கு முன்பாக இதுவரை மஞ்சள் கடவை இடப்படவே இல்லை இதனால் பாடசாலை ஆரம்பிக்கும் போதும் பாடசாலை முடிவடையும் போதும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

வாகனப்போக்குவரத்துக்கள் அதிகளவில் இடம்பெறுகின்ற இவ்வீதிப்பகுதியில் வீதி குறியடுகள் இடப்பட வேண்டியது 'மிக அவசியமாகும். எனவே வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னர் விரைவாக வீதிக் குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை உரிய இடத்தில் போடுவதற்கு உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (43)



கலைத்துறை மாணவர்களின் "சதங்கைநாதம்" எனும் நடன ஆற்றுகை கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றபோது.. (10)

முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மற்றவர்களில் தங்கியிருத்தல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு காத்திருந்து களைத்துப் போன அரசாங்கம் கடைசியில் வேறுவழியின்றி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துவிட்டது. தீர்வு குறித்து பேசுவதற்கான இந்தக் கடைசி வாய்ப்பையும் தட்டிக்கழிக்கிறது கூட்டமைப்புத் தலைமை. இந்த நாட்டின் அனைத்துத் தரப்புகளையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களுடன் நமது பிரச்சினைகளைச் சொல்லி ஆறு மாதத்துக்குள் தீர்வொன்றுக்கு வரக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தையும் எதிர்த்து ஏதோ ஞாயங்கள் பேசிவிட்டு எப்படி எமது மக்களுக்கான தீர்வைக் காணப்போகிறது இந்தத் தலைமை?

அங்கெல்லாம் போய்ப் பேசித் தீர்வைக் கண்டுவிட முடியாது என்பதை பேசிப்பார்க்காமலே மறுபக்கம் திரும்பிநின்று தெரிவித்துக்கொண்டிருக்கும் மர்மமென்ன? இந்தியாவும் உலகநாடுகளும் வற்புறுத்துவதுபோல் இந்த தெரிவுக்குழுவில் போய்ப் பங்கேற்று, அங்கு தங்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வைக்கமுடியவில்லை என்பதைக் காட்டினால், அது தீர்வைப் பெறும் முயற்சிகளின் ஒரு படியாகத்தானே அமையும்? மாறாக, பங்குபற்றுவதால் என்ன குறைவு நமக்கு வந்துவிடப் போகிறது?

சரி, இலங்கை அரசுடனோ ஏனைய கட்சிகளுடனோ பேசாமல் எப்படித் தீர்வை எடுக்கலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள்? தமிழர்களின் தேவை என்ன என்பதற்கு "தன்னாட்சி அலகு" என்று ஒற்றை வார்த்தையில் பதிலைச் சொல்லிவிட்டு அலட்சியமாய்த் திரிவது போல, தீர்வு எப்படி வரும் என்பதற்கும் "சர்வதேச அழுத்தம்" என்ற ஒற்றை வார்த்தையைச் சொல்லிவிட்டு உலகச் சுற்றுலா போய்வருகிறார்கள்.

சொந்த புத்தியில் செயற்பட முடியாததால்தான் இவர்களால் சொந்தமாய் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க முடியாமலிருக்கிறது. புலம்பெயர்ந்தோர் என்ன சொல்வார்களோ, தமிழ்நாட்டுக்காரர் என்ன சொல்வார்களோ, அமெரிக்கா என்ன சொல்லும், இந்தியா எதையாவது சொல்லும் என்று காத்திருப்பதிலேயே இவர்களது அரசியல் முடிகிறது.

இந்தியா உட்பட வெளிநாட்டு சக்திகள் இலங்கை அரசை நோக்கி அந்தந்த நேரத்துக்கு தமக்கு வசதிப் பட்டபடி விடுக்கும் கோரிக்கைகளை ஏந்திக்கொண்டு, ஏதோ நடக்கும் என்பதுபோல தமிழ்மக்களுக்கு அரசியல் படங்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காக ஒரு கதையைச் சொல்லலாம்.

ஒரு தெருவில், தந்தை கழுதை மேல் அமர்ந்துவர, மகன் அருகே நடந்துவரப் பயணம் போய்க்கொண்டிருந்தார்கள். எதிரே வந்த ஒருவன், "இப்படிச் சிறுபையனை நடக்கவிட்டு நீ கழுதை மேல் போகிறாயே, சிறுவன் பாவமல்லவா?" என்று கேட்டதும், தந்தை கீழே இறங்கிக்கொண்டு மகனைக் கழுதைமேல் ஏற்றிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அடுத்து எதிர்ப்பட்ட ஒருவன், "என்ன அநியாயம் இது! வயசானவர் நடந்துவரச் சின்னப்பையன் குஷாலாகக் கழுதைமேல் போகிறானே" என்று சிரித்தான். அப்பா பார்த்தார். பையனைக் கீழே இறக்காமல் தானும் அவனோடு மேலே ஏறி அமர்ந்துகொண்டார். எதிரில் இன்னொருவன் வந்தான். "உங்கள் ரெண்டு பேருக்கும் இரக்கமே இல்லையா? இரண்டு பேர் பாரத்தைக் கழுதை தாங்குமா?" என்று கேட்டுப் போனான்.

தந்தைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மகனையும் இறக்கி தானும் இறங்கிக்கொண்டு, கழுதை அருகே இருவரும் நடந்துபோனார்கள். பிரச்சினை இத்தோடு முடிந்துவிடவில்லை. மீண்டும் எதிரில் வந்த ஒருவன், "உங்களுக்கென்ன பைத்தியமா? கழுதை சும்மாதானே வருகிறது, நீங்கள் இருவரும் மடையர்களைப் போல நடந்துவருகிறீர்களே" என்றான்.

வேறுவழியின்றிக் கழுதையைத் தூக்கிக்கொண்டு ஓடினார்களாம் தந்தையும் மகனும். நாமும் தீர்மானங்களுக்கு மற்றவர்களில் தங்கியிருந்தால் இப்படித்தான் ஆகும்.

- ஆசிரியர்

# விருப்புவாக்கு முறைக்கும் ஆப்பு

# அஸ்கிரியபீடம் போர்க்கொடி

(கொழும்பு)

தேர்தல்களின் போது விருப்பு வாக்கு முறையை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும். அப்போது தான் அரசியலில் தூய்மை பேணமுடியும் என்று அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகித்த மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

உடுதும்பறை பூர்வாராம விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இன்று நிலவும் அரசியல் செயற்பாடுகள் சம்பந்தமாக யாரும் திருப்தி அடைய முடியாது. இன்றைய அரசியலில் கற்றோர், அறிவாளிகள் எனச் சில பிரமுகர்களே உள்ளனர்.

நேர்மையாக நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு நாட்டில் இடமில்லாது போயிருப்பதே இந்த நிலைமைக்குக் காரணமாகியுள்ளது.

இத்தகைய சான்றோர்கள் அரசியலுக்கு வருவதில்லை. முன்வந்தாலும் கூட அவர்களுக்கு வேட்புமனுக்கள் வழங்கப்படுவதில்லை.

மாறாக வழங்கப்பட்டாலும், அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. ஏமாற்றுக்காரர்களையும், தில்லுமுல்லுகள் புரிவோரையுமே அரசியலுக்கு எப்போதும் தெரிவு செய்து கொள்கின்றனர். இந்த முறைமை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கும் இடமளிப்பதா? என்ற கேள்விக்கான விடை பொதுமக்களிடமே உள்ளது.

இந்த நிலைப்பாட்டுக்கு முக்கியமான காரணியாகியிருப்பது விருப்பு வாக்கு முறைமையாகும். இந்த முறைமையை நாம் அனைவரும் கடுமையாக நிராகரிக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்கு மாத்திரமே இருக்க வேண்டியுள்ளது. எதற்காக மூன்று விருப்பு வாக்குகள்? இவ்விதம் மூவருக்கு விருப்பு வாக்குகள் கிடைப்பதால்தான் ஏமாற்றுக்காரர்கள் அதிகரித்து வருகின்றனர். அதனால் தான் மக்களுக்குப் பயனற்ற நபர்கள் அரசியலுக்கு வருகின்றனர் என்றார்.

# களைகட்டுகிறது அநுராதபுரம் வடக்கிலிருந்தும் பக்தர்கள்

(கொழும்பு)

பொசன் பண்டிகையை முன்னிட்டு இம்முறை சுமார் 16 இலட்சம் பக்தர்களின் வருகையை எதிர்பார்ப்பதாக அநுராதபுரம் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

பொசன் பண்டிகைக்காக வருகை தரும் பக்தர்களின் நலன்கருதி சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் மிந்த செனவிரத்ன தெரிவித்தார். பெருமளவான பக்தர்கள் ஏற்கனவே அநுராதபுரம் நகரை வந்தடைந்துள்ளதாக அவர் கூறினார். அநுராதபுரத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க விகாரைகளை மையமாகக் கொண்டு நாடு முழுவதிலும் இருந்து பக்தர்கள் வருகை தருவதாக மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகின்ற பக்தர்களின் நலன்கருதி விசேட போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, நீர் நிலைகளில் குளிக்கும் போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு அநுராதபுரம் நகருக்கு வருகின்ற மக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தடை செய்யுங்கள் புலிகளை ஆஸி.யிடம் ஜீ.எல்.கோரிக்கை

(கொழும்பு)

யுத்தத்தில் தோற்றதன் பின்னர், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆட்கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் விடுதலைப் புலிகளின் எஞ்சிய தரப்பினர் வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றனர்.

அவர்களால் மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் செயற்பாடுகளாலேயே தற்போது அவுஸ்ரேலியா சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

எனவே இந்தச் சிக்கலில் இருந்து மீள வேண்டுமாக இருந்தால், அவுஸ்ரேலியா விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துள்ள போதும், அவுஸ்ரேலியா இன்னும் அதனைத் தடை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்அமைச்சினால் வழங்கப்படும் நியமனங்களுக்கு 18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்களும் அரச சேவையிலுள்ளவர்களும் (இவர்களுக்கு வயதெல்லை ஏற்படையதல்ல) விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகமையாக க.பொ.த.(சா.த) தரம், க.பொ.த. (உ.த) சித்தியடைந்திருத்தலுடன், தொழில்சார் தகமைகளும் பெற்றிருத்தல் வேண்டும். சம்பள அளவுத்திட்டம்,சேவை நிபந்தனைகள் ஆட்சேர்ப்பு முறை, விண்ணப்பிக்கும் முறை, பாடவிதானம் போன்ற விபரங்களை 21.06.2013 அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு எதிர்வரும் 23.07.2013 ஆகும் பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் நடைபெறும்

பரீட்சை 2013-செப்ரெம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறும். (105)

# கல்வி ஆணைக்குழுவில் பதவி வெற்றிடங்கள்

## பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம்

தேசிய கல்வி ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள ஐந்து பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 45 வயதிற்கும் உட்பட்ட நன்நடத்தையுள்ள, தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் ஆரோக்கியமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கொள்கை ஆராய்ச்சி அலுவலர், நிகழ்ச்சித் திட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், முகாமைத்துவ உதவியாளர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகமைகள், சம்பள விபரம், சேவை நிபந்தனைகள், விண்ணப்பிக்கும்முறை, மாதிரி விண்ணப்பம் ஆகியவற்றைக் கடந்த 21.06.2013 திகதி வெளியாகிய அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். (105)

■ சங்கர சிவன்

# தமிழ் மக்களை ஏமாற்றும் இன்னொரு நாடகம்

கடந்த நான்கு வருட காலத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் பல தடவைகள் இந்தியாவுக்குச் சென்று வந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு தடவையும் இந்தியாவின் பிரதான தலைவர்களுடன் ஏதோவொரு முக்கிய விடயம் பற்றிப் பேசப்போகின்றார்கள் என்று உள்ளூர்ப் புத்திரிகைகள் படங்காட்டின. ஆனால், நடந்தது ஒன்றுமில்லை. இந்த வகையிலேயே அண்மைய இந்திய விஜயமும் இடம்பெற்றது.

பதின்மூன்றாவது திருத்தத்துக்குத் திருத்தங்கள் மேற்கொள்ள அரசாங்கம் முயற்சி மேற்கொண்ட வேளையிலேயே கூட்டமைப்புத் தலைவர்களின் இந்திய விஜயம் தீர்மானிக்கப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தத்தை இந்தியா பாதுகாக்க வேண்டும் என்பது இவர்களின் பிரதான கோரிக்கை. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக உள்ளூர் மட்டத்தில் இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காததால் இந்தியாவுக்குச் சென்றார்களா? என்று கேட்டால் இல்லை என்பதே பதில். பிரச்சினைகளின் தீர்வுக்காக எதுவும் செய்யாமல் மற்றவர்கள் அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தான் கூட்டமைப்புத் தலைவர்களின் வழமை ஆகிவிட்டது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்க இவர்களால் முடியவில்லை. அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறினார்கள். நாடாளுமன்றத் தெரிவுக்குழு போன்ற அமைப்புகளில் பங்குபற்றி அரசியல் தீர்வை வலியுறுத்த இவர்கள் விரும்பவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றார்கள். இப்போது பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்க உள்ளூரில் எந்த முயற்சியும் எடுக்காமல் இந்தியாவுக்குக் காவடி தூக்கியிருக்கின்றார்கள்.

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பொறுத்த வரையில் கூட்டமைப்பு நாடகம் ஆடுகின்றதா என்று கேட்கத் தோன்றுகின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதாகக் கூறுகின்றார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாகக் கூட ஏற்க முடியாது என்று சில தினங்களுக்கு முன் சிவஞானம் சிறிதரன் கூறினார். மற்றைய தலைவர்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். மறுபுறத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும்படி இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் மாகாண சபை தொடர்பாகக் கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாடு என்ன? மாகாண சபையைத் தொடக்கப் புள்ளியாக ஏற்று




பதின்மூன்றாவது திருத்தத்தை இந்தியா பாதுகாக்க வேண்டும் என்பது இவர்களின் பிரதான கோரிக்கை. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்காக உள்ளூர் மட்டத்தில் இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காததால் இந்தியாவுக்குச் சென்றார்களா என்று கேட்டால் இல்லை என்பதே பதில். பிரச்சினைகளின் தீர்வுக்காக எதுவும் செய்யாமல் மற்றவர்கள் அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தான் கூட்டமைப்புத் தலைவர்களின் வழமை ஆகிவிட்டது.



அதிலிருந்து படிப்படியாக முன்னேறி முழுமையான அரசியல் தீர்வை அடையலாம் என்பதை ஏற்றுக்கொள்கின்றார்களா? அல்லது மாகாண சபையினால் ஒரு பிரயோசனமும் இல்லை என்று அதை நிராகரிக்கின்றார்களா? மக்களுக்குத் தெளிவான நிலைப்பாட்டைக் கூறாமல் மூடுமந்திரமாக வைத்திருப்பது ஏன்?

கூட்டமைப்பின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது அது மாகாண சபையை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் வெளிப்படையாக அதைக் கூறத் தயங்குவதாகவும் தெரிகின்றது. மாகாண சபையை ஏற்பதாலேயே பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றார்கள். மாகாண சபையை 1988ஆம் ஆண்டு நிராகரித்ததால் இப்போது ஏற்பதை மக்களுக்கு எப்படி நியாயப்படுத்துவது என்ற தயக்கம். அரசியல் தலைமை அதன் உண்மையான நிலைப்பாட்டை மக்களுக்கு வெளிப்படுத்தத் தயங்குமேயானால் அத்தலைமை மக்களைக் கைவிடுகின்றது என்று அர்த்தம். அன்று மாகாண சபையை ஏற்றிருந்தால் இன்று நிலைமை எவ்வளவோ மாறியிருக்கும்.

கூட்டமைப்புத் தலைவர்கள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். இந்த விஜயத்தின் பலாபலன்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன் இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை இந்தியா ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்றும் அதன் அணுகு முறையில் மாற்றம் ஏற்படப் போகின்றது என்றும் கூறினார். இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு நம்பிக்கையூட்டும்இவ்வாறான கருத்துக்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிவித்து வந்திருக்கின்றார்கள். அவை எதுவுமே நடக்கவில்லை. இந்தத் தடவை முன்னதிலும் பார்க்கக் கூடுதலான நம்பிக்கையை வளர்க்கும் வகையில் கருத்துத் தெரிவித்ததற்கு விசேடமான காரணம் உண்டு.

தென்னிலங்கை அரசியலில் சாதகமான ஒரு மாற்றம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதற்கு அரசாங்கத் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி அரசாங்க நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களாலேயே முறியடிக்கப்பட்டிருக்கின்றது. அரசியலமைப்பில் எந்த மாற்றத்தைச் செய்வதாக இருந்தாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. பதின்மூன்றாவது திருத்தத்தில் வலுக்குறைப்புச் செய்யும் முயற்சிக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் இந்த நிலைப்பாட்டில் தொடர்ந்து நிற்கப்போவதாக உறுதியாகக் கூறுகின்றார்கள். இவர்களின் எண்ணிக்கை அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்க முடியாத அளவுக்கு உள்ளது.

இதனால் அரசாங்கம் தனது முயற்சியைக் கைவிட நேர்ந்தது. பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிரான முயற்சியை இந்தியாவின் பங்களிப்பு இல்லாமலே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். இது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வளர்ச்சிப் போக்கு.

இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டமைப்புத் தலைவர்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றனர். அரசாங்கம் பெரும்பான்மை பலத்தைப் பாவித்துப் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கிவிடும் என்று அதற்கு நியாயமும் சொல்கின்றார்கள். இன்று ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமையில் இந்த நியாயம் செல்லுபடியற்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ன தீர்மானத்தை எடுத்தாலும் அது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பின்னரே நடைமுறைக்கு வர முடியும். பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதற்கு அரசாங்கத்துக்கு இப்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை. இந்த நிலையில் தெரிவுக் குழுவை நிராகரிப்பதைக் கூட்டமைப்பினர் நியாயப்படுத்த முடியாது.

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்களில் ஒருவரான அமைச்சர் ராஜித சேனாரத்ன கூட்டமைப்பினர் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும் என்றும் அவர்களுக்குப் பக்கபலமாகத் தாங்கள் செயற்படுவதாகவும் பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறுகின்றார். கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிவுக் குழுவில் பங்குபற்றி இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்குக் கூட்டமைப்பு விரும்பாததாலேயே இந்தியா பற்றிய நம்பிக்கையை வளர்த்து மக்களைத் திசை திருப்ப முயற்சிக்கின்றார்கள்.

இந்தியா தமிழ் மக்களுக்குச் சாதகமான நல்ல முடிவை எடுத்திருக்கும் நேரத்தில் தெரிவுக் குழுவில் பங்குபற்றிக் கோட்டைவிடக் கூடாது என்ற கருத்தைத் தமிழ் மக்களிடம் திணித்துத் தெரிவுக் குழுவை நிராகரிப்பதற்கான முயற்சியாகவே இந்தியா பற்றிய நம்பிக்கையை வளர்க்கின்றார்கள். சுருக்கமாகக் கூறுவதானால், தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள். இதனால் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் சாதாரரண தமிழ் மக்களேயொழியத் தலைவர்களல்ல.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைக் கூட்டமைப்புத் தலைவர்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றனர். அரசாங்கம் பெரும்பான்மை பலத்தைப் பாவித்துப் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கிவிடும் என்று அதற்கு நியாயமும் சொல்கின்றார்கள். இன்று ஏற்பட்டிருக்கும் புதிய நிலைமையில் இந்த நியாயம் செல்லுபடியற்றது. தெரிவுக்குழு என்ன தீர்மானத்தை எடுத்தாலும் அது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பின்னரே நடைமுறைக்கு வர முடியும். பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்வதற்கு அரசாங்கத்துக்கு இப்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை. இந்த நிலையில் தெரிவுக் குழுவை நிராகரிப்பதைக் கூட்டமைப்பினர் நியாயப்படுத்த முடியாது.

# ஆட்கடத்தலின் சூத்திரதாரி

# முன்னாள் புலி உறுப்பினர் கைது

(திருகோணமலை)

சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்ட முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். 88 பயணிகளை அழைத்துக் கொண்டு சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு சென்றுகொண்டிருந்த போது கடந்த 20ஆம் திகதி திருகோணமலை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் பிடிக்கப்பட்ட டோலர் படகில் இருந்த புலிகளின் முக்கிய உறுப்பினர் எனக் கூறப்படும் ஒருவர் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கரடிப்போக்கு என்ற பிரதேசத்தைச் சேர்ந்த ஆரியனந்தன் பார்த்தீபன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அதேவேளை டோலர் படகை ஓட்டிச் சென்றவா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர், அவரை எதிர்வரும் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

படகில் இருந்து கைதுசெய்யப்பட்டவர்களில் 55 ஆண்கள், 13 பெண்கள், 18 சிறுவர்கள், 09 சிறுமிகள் அடங்குகின்றனர். இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், அம்பாறை, முல்லைத்தீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என காவற்துறையினர் தெரிவித்துள்ளனர். படகில் சென்ற பயணிகள் அனைவரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார். புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

# அலங்கார மீன்பிடித்தவர் மூச்சுத்திணறி மரணம்

(கொழும்பு)

அலங்காரத்துக்காக வளர்க்கப்படும் வர்ண மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் மூச்சுத்திணறல் காரணமாக மரணமடைந்துள்ளார். திருகோணமல - பூம்புகார் கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 40 வயது காளி பூமிநாதன் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் கடலுக்குச் சென்ற இவர் வர்ண மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளது. வர்ண மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொள்ளும் இவர் ஒட்சிசன் தாங்கிகளுடன் கடலுக்குள் சென்ற போது வாயு கசிந்து உடலுக்குள் சென்ற காரணத்தினாலே உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. மரணமடைந்தவருடன் வர்ண மீன் பிடிப்பதற்காக சென்ற ஏனைய இரு நபர்களிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யுத்தத்தால் வீடு இழந்தவர்களுக்கு மற்றுமொரு வீடமைப்புத்திட்டம்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு புதிய வீடமைப்பு உதவியை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முன் வந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமார் 25,000 வீடுகள் அமைக்கப்பட உள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி பெர்னாட் சாவேஜ் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார். அடுத்த ஆண்டில் இந்த வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. பிரதமர் டி.எம். ஜயரட்னவை சந்தித்த போது, சவேஜ் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். நாட்டின் அபிவிருத்திக்கு முழுமையான அளவில் உதவிகளை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் அனைத்து மக்களும் சமாதானத்துடன் வாழ்ந்து வருவதாக பிரதமர் ஜயரட்ன குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளின் குண்டுத்தாக்குதலுக்கு இராணுவ கேணல் உதவினாரா?

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடந்த 2009ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நடமாட்டத்துக்கு உதவியளித்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவத்தின் கேணல் பதவிநிலை வகிக்கும் அதிகாரி ஒருவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழக்கு தொடுநர் தரப்பு சாட்சிகளின் வாக்குமூலத்தை படிப்பதற்காக எதிர்த்தரப்பு வழக்குரைஞருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க எதிர்வரும் ஓகஸ்ட் 22ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கினார்.

இந்நிலையில், இவ்வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கேணல்ரஞ்சித் சந்திரசிறி பெரேராவுக்கு எதிரான வழக்கு, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேகநபர் சார்பில் நீதி மன்றில் ஆஜரான சாலிய பீரிஸ், 'சற்று முன்னரே தனக்கு வழக்குத் தொடுநர் பக்க சாட்சியங்களின் வாக்குமூலங்களின் பிரதிகள் தரப்பட்டன எனவும் இதனால் தனக்கு அவற்றைப் படிக்க முடியவில்லை' எனவும் கூறினார். வழக்குத் தொடுநர்தரப்பு சாட்சியமான கனகரத்தினம் ஆதித்தியன் சார்பில் ஆஜரான எம்.நளீம், 'ஒரு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள தனது கட்சிக்காரர் இதே விடயம் தொடர்பான இன்னொரு வழக்கில் சாட்சியாக்கப்பட்டுள்ளார் எனவும் இது சட்ட நெறிக்கு எதிரானது எனவும்' வாதிட்டார்.

இது தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வரும்படி வழக்கு தொடுநருக்கு பணித்த நீதிபதி விக்கிரமசிங்க விசாரணைக்கான திகதி ஓகஸ்ட் 22 என அறிவித்தார்.

# வதிவிட வாடகை செலுத்தவில்லை எம்.பி.கள் பலர் சட்டத்தின் பிடியில்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேருக்கு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. மாதிவலயில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கான வாடகை கட்டணத்தை செலுத்த தவறியதாக கூறப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேருக்கு நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. ஜுலை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பிவைக்குமாறு நுகேகொட நீதவான் நாமல் பண்டாரபல நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 05ஆம் திகதி முதல் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 07 ஆம் திகதி வரை மாதிவல உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் தங்கியிருந்து வாடகை செலுத்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மஹிபால ஹேரத், டி.எம்.பண்டாரநாயக்க, ராசா குகனேஷ்வரம், சஞ்ஜீவ பண்டார கவிரத்ன, ஸ்ரீ ஆனந்திரா ஹெந்ததி, சுரேஷ் சதாசிவம், சந்தன கதிரியாராச்சி, திலின பண்டார தென்னக்கோன், பதிரனகே தொன் அபேரத்ன, மொஹமட் அப்துல்ல மஹ்ரூப், மொஹிதீன் பாவா அப்துல் அஸீஸ், வண. பத்தேகம சமிந்த தேரர், உபாலி சமரவீர, ஜஸ்டின் கலப்பத்தி, லக்கி ஜயவர்தன, தம்பி மொஹமட், மொஹமட் அப்துல்லா மொஹமட் ஆகியோருக்கே இவ்வாறு நீதிமன்றத்தினால் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# குளத்தில் நீராடிய பெண் முதலைக்கு இரை



கம்புறுபிட்டிய பொலிஸ் பிரிவில் கந்துவ, ரஜகல்கொட பகுதியில் நில்வளா கங்கையில் நீராடச் சென்ற பெண்ணை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 43 வயதுடைய கமலாவதி என்ற பெண்ணே இவ்வாறு முதலைக்கு இரையாகியுள்ளார்.

கம்புறுபிட்டி பொலிஸ், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், மாலிம்பட பிரதேச சபை மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து சடலத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கம்புறுபிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சமையலில் மூழ்கினார் தாயார் நீரில் மூழ்கி மரணித்தது குழந்தை



(கொழும்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விபுலானந்தபுரம் கிராமத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து 10 மாத ஆண் குழந்தையொன்றின் சடலத்தை ஏறாவூர் பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் நண்பகல் வேளையில் இச்சடலம் மீட்கப்பட்டது.

குழந்தையை தான் தொட்டிலில் உறங்க வைத்துவிட்டு வீட்டு வேலைகளை கவனித்துக் கொண்டிருந்ததாகவும் பின்னர் பார்த்தபோது தனது குழந்தை காணாமற் போயிருந்ததாகவும் தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டை அடுத்து குழந்தையைத் தேடும் பணியில் ஈடுபட்ட பொலிஸார் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து குழந்தையின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அருளானந்தன் அனுஷன் என்ற குழந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளது. சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் ஆசிரியர்கள் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று திருகோணமலையில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்டது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னால் பிற்பகல் 2.25 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் 2.45 வரை நீடித்தது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் நாயகம் யோசப் ஸ்டாலின் இதில் கலந்து கொண்டார்.

ஆனமடு பிரதேசத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவர் அரசியல் வாதியினால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.





போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல பதாகைகளையும் தாங்கி இருந்தனர்.

கல்வியை அரசியல் மயப்படுத்துவதை உடன் நிறுத்து, கல்வியில் அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்களை உடன் நிறுத்து, தேசிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்து, ஆனமடுவிற்கு நேற்று கிழக்கு மாகாணத்திற்கு நாளைக்கு போன்ற பதாகைகளை ஆசிரியர்கள் தாங்கி இருந்தார்கள்.

# உடல், உள, சமூக ஆளுமைகளை
# போட்டிகள் சிறப்பாக முன்னெடுக்கும்

## — புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சுப்பிரமணியேஸ்வரன் —



வளங்கொழிக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பில் ஒளிரும் பாடசாலைகள், மாணவர்களின் உடல், உள, சமூக ஆளுமைகளை விருத்தி செய்யும் வகையில் போட்டிகளையும், நிகழ்வுகளையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது எனப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சி.சுப்பிரமணியேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வன்னியின் பெரும்சமர் கிரிக்கெற் போட்டி அண்மையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் வாழ்த்துரை வழங்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயமும "வன்னியின் பெருஞ்சமர்" என்னும் ஆக்க பூர்வமான செயல் வீரத்துடன் தம்மை இணைத்து வன்னி மண்ணின் கல்வி இலக்கிற்குக் கலங்கரை விளக்கமாக திகழ்வதையிட்டு பெருமையடைகின்றேன். இன்றைய உலகையே திசை திருப்பி ஆனந்தக் கடலில் திளைக்கவைத்து கல்விமான்கள் பலருக்கும் விருந தூட்டும் போட்டி, துடுப்பாட்டமே என்பது வெளிப்படை.

கிளி - முல்லை நட்புக்கிண்ணத்திற்கான மாபெரும் துடுப்பாட்டப் போட்டியில் இரு பாடசாலைகளினதும் முதன்மை அணிகள், நீண்ட கால இடைவெளிக்குப் பின்னரும், 3ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்து வீறு நடை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு பேருவகையடைகின்றேன்.

இச் சமரானது இவ் வாண்டிலே இரு பாடசாலைகளையும் ஊக்குவித்து புதிய நுட்பங்களையும், மாணவர்களிடையே தலைமைத்துவம், நட்புறவு, புரிந்துணர்வு, தன்னம்பிக்கை, விட்டுக்கொடுப்பு முதலிய பண்புசார் விருத்திகளை உருவாக்கவும் வழிசமைக்கிறது. அத்துடன் இவ் விருபாடசாலைகளும் இப்போட்டியில் தாம் பெறும் இடங்களை தொடர்ந்து வரும் காலங்களில் தக்கவைத்துக் கொள்வதிலும், அதைத் தமக்குரிய சிறப்பாக்கிக் கொள்வதிலும் அக்கறை காட்டி வருகின்றமை பாராட்டத்தக்கது என்றார்.

# வேலணை பிரதேச செயலகத்தில்
# மிதிவெடி அபாய விழிப்புணர்வு

(வேலணை)

மிதி வெடி அபாயம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கொன்று எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை வேலணை பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'செண்ட்' நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் நடாத்தப்படவிருக்கின்ற இந்த விழிப்பூணர்வுக் கருத்தரங்கில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்கள், மாதர் கிராம மற்றும் ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையங்கள், பயிர் செய்கைக் குழுக்கள், கமக்கார சங்க அமைப்புக்கள் ஆகியவற்றில் உள்ள உறுப்பினர்கள் பிரதிநிதிகள் என்போருக்கிடையில் இந்த விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள் இடம்பெற விருப்பதால் சகலரையும் கலந்து கொண்டு விழிபுணர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (05)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் திருப்பதி அருள்மிகு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய நூதன மஹாசம்ப்ரோசணம், மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கிரியாரம்பம் ஆரம்பமாகி 26ஆம் திகதி புதன்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வண்வடமேற்கு வள்ளுவர் சனசமூகநிலைய திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் மயில்வாகனம் இரகுநாதன் ஜே/98 கிராம அலுவலர் வை.சுரேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கலந்துரையாடல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை, யாழ்.மாவட்டத்தில் நடைமுறை மனிதாபிமான செயற்பாடு பற்றியும், எதிர்காலத்திட்டங்கள் பற்றியும், கலந்துரையாடல் இன்று முற்பகல் 10.30 மணியளவில் 73, கண்டி வீதியிலுள்ள யாழ். கிளை அலுவலகத்தில் நடைபெறும் என யாழ்.கிளைத்தலைவர் கே.பாலகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் அண்மையில் காலமான மலையக தொழிற் சங்க போராளி ஓ.எ.இராமையாவின் நினைவு தினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள D.C.M தனியார் கல்வி நிறுவனத்தில் சொ.சிவபாலன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.



**யாழ்ப்பாணம் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இடம்பெற்ற முதலுதவிப் பயிற்சியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையக நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் உபாலி அமரசேகர விளக்கமளிப்பதையும், போதனாசிரியர்களான ந.இலங்கேஸ்வரன், ப.முரளி ஆகியோரைப் காணலாம். (08)**

# முரசின் இன்றைய பலன்



(23.06.2013 –ஞாயிற்றுக்கிழமை)

**விஜய வருஷம் ஆனி மாதம் 09ஆம் திகதி. மூலநட்சத்திரம். பின்னிரவு 02.38 வரை. பூரணை மாலை 05.40 வரை. அமிர்த சித்தம் நாமயோகம். இராகுகாலம் 04.24 - 05.54 வரை. சுபநேரம் 08.54 - 10.24 வரை.**

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **மேடம்**  | பொறுமை/சகிப்புத்தன்மையினால் காரிய சித்தி, சகோதர உறவில் மனஸ்தாபம், வைத்திய வசதி நாட்டம், பயணம் பற்றிய திட்டம், பணம் எடுத்துச் செல்வதில் அவதானம், கைவிட்ட பொருள் கிடைத்தல், ஆலய தரிசனம் புதியன கொள்வனவு, வாகனத்தால் பிரச்சினை, ஏழில் சனீஸ்வரன் இருப்பதினால் இன்ப சுகம் பாதிப்பு, தொழிலில் தகராறு தோன்றல், பங்குத் தொழில் முறிவு. |
| **ரிஷபம்**  | வியாழ சுகம், பொன் பொருள் சேர்க்கை, பயணத்திற்கான அழைப்பிதல், குழந்தைப் பேறு, சுப காரியச் செலவு, வெளிநாட்டிலிருந்து மகிழ்வான செய்தி, கலை/விளையாட்டுத்துறையில் பாராட்டு, பரிசில்களும், சுவீப்பில் பணம் அள்ளல், மீற்றர் வட்டியால் கவலை, வியாபாரவிருத்திக்கு புதிய வாகனயோகம், வாடகைக்கு வீடு கிடைத்தல். |
| **மிதுனம்**  | குரு மாற்றம், புத்திரர் பற்றிய மகிழ்வினைத் தருதல், திடீர் சுகவீனத்தால் அவதி, குறைகேட்டல், பிரச்சினை தீர்க்க முன்வந்து மனத்தாங்கல், கடனினால் தொல்லை, கட்டணம் கட்டாமையினால் மின்சாரம்/தொலைபேசி நிற்பாட்டல், காப்புறுதி செய்யுந்திட்டம், பயணம்/தொழில் பற்றிய கலக்கம், ஆவணப் பற்றாக் குறையால், பிரச்சினை, மருமகள் மாமியார் உறவில் விரிசல் தோன்றல். |
| **கடகம்**  | 4இல் சனியால் முயற்சிகளில் மந்த நிலை, கடனை அடைக்க முடியாது கவலை, தாயாரின் சௌபாக்கிப் பாதிப்பு, நட்பினால் உதவி, வாகனத் தொல்லை, பயணத்திற்காக முகவர் அழைப்பு, கவனக்குறைவினால் சிறு விபத்து, நகை அடகுவைக்க முயற்சி, இரவுப் பிரயாணத்தை தவிர்த்தல், அயலவருடன் வாக்குவாதம், மக்களின் செயலைக் கண்டிக்க வெளிக்கிடல், தொலைந்தது கிடைத்தல். |
| **சிம்மம்**  | வியாழசுகத்தினால் தொல்லை அகலல், பயணம் பற்றிய தித்திப்பான செய்தி, பிதாவின் உடற்சுகம் திருப்தி, வியாபாரம் இலாபந்தரல், மூத்த சகோதரர் உதவி, புதியன கொள்ளல், பூமி விற்று வர்த்தக நிலையம் அமைக்கும் திட்டம், புதிய ஜீவன் தோன்றல், முரண் பாடு தீர்ந்துவிடல், திருமண முயற்சி வெற்றி, தனிமை யினால் மன உளைச்சல், விருந்தினர் வருகை, சுவீப் அதிர்ஷ்டம். |
| **கன்னி**  | பத்தில் வியாழன் உள்ளதால் தொழிலில் கவனம், எதிர்பாராத இடமாற்றம், பணமுடையினால் காசோலை திரும்புதல், பிணையினால் மனத்துன்பம், பிரயாணத்தில் பொருட்கள் இழப்பு, ஆபாசப் படங்களினால் தண்டம், கொடுக்கல் வாங்கல் தகராறு, சட்டவிரோதச் செயலால் காவல்துறை செல்லல், உணவுக் கேட்டினால் நோய், கௌரவப்பதவி கிடைத்தல். |
| **துலாம்**  | அட்டமத்து வியாழன் விலகியதனால் புதிய தொழில் ஆரம்பம், வெளிநாட்டு மக்கள் வருகை, விளம்பரத்தால் விற்பனை அமோகம், நோய் கட்டுப்பாட்டுக்குவரல், பரீட்சை முடிவு கேட்டு ஆனந்தம், விஷக்கடி பற்றிய எச்சரிக்கை, தொழில் பெற அரசியல் பிரமுகர்களை நாடுதல், இடைத் தங்கல் நாட்டைக் கைவிடுதல், பதவி நிரந்தம் என்ற செய்தி, பார்வைக் குறைபாட்டாளர்களுக்கு நலத்திட்டம். |
| **விருச்சிகம்**  | ஏழரைச் சனி நடப்பதினால் துணை/பிணைக்குச் சென்று கவலை, வயிற்றுடன் தொடர்பான நோய்கள், இடமாற்றம் ஒத்திவைத்த செய்தி, வங்கிப்பணம் சரிபாராமையினால் கவலை, ஆவணங்கள் பற்றாக் குறையினால் நேர்முகம் பாதிப்பு, பயணம் கைவிடத்திட்டம், மக்கள் உயர்வு கேட்டு மகிழ்வு, தாரத்தின் தேகநிலை முன்னேற்றம். |
| **தனுசு**  | வெளியூர் பயண ஏற்பாடுமேலதி காரிகளின் பாராட்டு, குழந்தைப்பேறு, நியமனம் பற்றிய செய்தி, தோஷ நிவர்த்திக்கு ஆலய தரிசனம், சிறையினின்றும் வெளிவரல், சுபகாரியச் செலவு, மாமன்மாரின் ஆதரவு, புதியன சேரல், சீரற்ற கால நிலையால் தொழிலுக்கு கெடுதி, கப்பம் கேட்டு தொலைபேசி மிரட்டல், கடன் வசூலித்தல். |
| **மகரம்**  | துடுப்பெடுத்தாட்டத்தில் சாதனை, புலமைப்பரிசில் பெற்று வெளியூர் பயணம், நூல் வெளியீடு, கவனக் குறைவினால் சிறுவிபத்து, கணனி திருடரால் அபகரிப்பு, முரண்பாட்டுக்கு சுமுகமாகத்தீர்ப்பு, கால்நடையினை நோய் குணமடைதல், திருமணம் நிறைவேற்ற விளம்பரம், பிறர் நடத்தையைக் கண்டிக்க முயலல், கராட்டி பயில வெளிக்கிட்டு உடல் வலி, வங்கித்தொடர்பு அற்றுப் போதல், சுவீப்பில் அதிர்ஷ்டம். |
| **கும்பம்**  | விலை வீழ்ச்சியினால் நட்டம், போலி நகையை அபகரித்த திருடருக்கு ஏமாற்றம், பெரியோரைச் சந்தித்தல், சங்கத்தில் அங்கத்துவப்பதவி, ஆலயதரிசனம், வங்கிப் பணத்தை சரிபார்க்காமை, கௌரவப் பதவிக்கு சிபார்சு, வாகனயோகம், காப்புறுதியினால்நன்மை, புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம், தனித் திருந்தமையினால் துயரம். |
| **மீனம்**  | வழக்கின் தீர்ப்பை அடுத்து மேல் நீதிமன்றுக்கு அப்பீல், தற்கொலை எண்ணமுடிவைக் கைவிடல், சவாலை எதிர்கொள்ள தயார் நிலை, நித்தரைத்தூக்கத்தி னால் விபத்து, பட்டப்பின் படிப்பு மேற்கொள்ள அழைப்பு, பல் நோய் வருத்தல், கணக்கினைச் சரியாகப் பாராமையினால் நஷ்டம், உணவுப் பண்டத்தினால் நோய், படுக்கையில் விஷக்கடி, பயணம் பற்றிய மகிழ்ச்சிகர செய்தி. |

# யாருக்கு இறுதி மகுடம்?

## க. இலட்சுமி

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மலையேறப்போகும் இறுதி நாள் இன்று. வடிகட்டி இங்கிலாந்துக்கு வரவழைக்கப்பட்ட அணிகள் எட்டு. வாகை சூடும் என எதிர்பார்க்கப்பட்ட அணிகள் சில. இதில் மழையுடன் மாண்ட அணி மேற்கிந்தியத் தீவு. உள்முரண்பாடுகள் காரணமாக வெளியேறிய அணி அவுஸ்ரேலியா. மிஸ்பாவை கவிழ்க்கவோ என்னவோ காலைவாரியது பாகிஸ்தான் துடுப்பாட்ட வரிசை. பலமான அணியான போதும் பரிதாபகரமாக வெளியேறியது பாகிஸ்தான். மக்கலம் தலைமைக்கு வந்ததிலிருந்து நியூசிலாந்துக்கு அதிர்ஷ்டம் அறவே இல்லாமல் போய்விட்டது. முதல் சுற்றுடன் நடையைக் கட்டிய அணிகள் இவை.

முதல் அரையிறுதி இங்கிலாந்தின் பந்து வீச்சுக்கு முன்னாள் மண்டியிட்டு மரணத்தைத் தழுவியது தென்னாபிரிக்கா. சீரற்ற கால நிலையும், நாணயச் சுழற்சியும் காலைவாரியது இலங்கைக்கு. இன்று மகுடம் சூடிக் கொள்ளும் இறுதி நாள். இதில் மோதவுள்ளது இந்தியா, இங்கிலாந்து. இரு அணிகளுமே கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்ற பதற்றத்திற்கோ அல்லது படபடப்பிற்கோ உள்ளாகியிருக்கும்.

இதில் இங்கிலாந்து அணி, பலத்தில் மெலிந்து தெரிந்தாலும், அதன் சொந்த மண்ணில் போட்டி நடைபெறுவதால் அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே அது முற்படும். ஏனெனில், இங்கிலாந்தில் தற்போது குளிர் அதிகமாக இருப்பதால் பந்து வீச்சில் பலமாகவுள்ள அணிக்கும், நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணிக்கும் அதிக வாய்ப்பிருந்ததை நடைபெற்று முடிந்த போட்டிகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இங்கிலாந்து அணி அதன் சிதோஷ்ண நிலையை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவே முற்படும். அத்துடன் அது வலுவான பந்து வீச்சு வரிசையையும் கொண்டுள்ளது. அதன் பலமே பந்து வீச்சு என்றே கூறலாம். வலுவான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளபோதும் அதிரடியில் மிரட்டுவதற்குரிய வீரர்கள் ஒரு சிலரே உள்ளனர். இதில் இயன் மோர்கன், பட்லர், ரவிபோபாரா ஆகியோரே அதிரடியில் அசத்தக்கூடியவர்கள். ஏனைய அனைவரும் விக்கெட்டைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய டெஸ்ட் வீரர்களே. எதிரணியை 250 அல்லது 275 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத் தினால் அதனை விரட்டிக் கூடிய துடுப்பாட்ட வரிசையையே இங்கிலாந்து அணி கொண்டுள்ளது. களத்தடுப்பில் ஒரு சில வீரர்களே ஜொலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்திய அணியைப் பொறுத்தவரை அதன் பலம் துடுப்பாட்டம்தான். இதில் சேவாக், கம்பீர், யூவராஜ்சிங், ஹர்பஜன்சிங் மற்றும் ஒரு நாள் போட்டியில் ஓய்வு பெற்ற வீரர் சச்சின் என ஜொலிக்கும் நட்சத்திரங்களைத் தவிர்த்து அதனால் சாதிக்க முடியுமா என்ற கேள்வி கிரிக்கெட் வட்டாரத்தில் இத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் நிலவியது.

சச்சின் இல்லாத முதல் வெளிநாட்டுத் தொடர் இது என்பதால் இந்தியாவுக்கு அதிக அழுத்தம் இருக்கும் என கும்ளே கூட கவலைப் பட்டதுண்டு. ஆனால், மேற்படி சிரேஷ்ட வீரர்கள் அணிக்குள் மீளத் திரும்ப முடியாத நிலையை இந்தியாவின் இளம் வீரர்களின் ஆட்டம் வெளிப் படுத்தியிருக்கின்றது.




களத்தடுப்பு, பந்து வீச்சு, துடுப்பாட்டம், அணித் தலைமைத்துவம் என அனைத்துத் துறைகளிலும் இந்திய அணி ஜொலிக்கின்றது. துடுப்பாட்டத்தில் பிரமிப்பூட்டும் வரிசையை அது கொண்டுள்ளது. தவான், ரோகித் சர்மா, ஹோலி, தினேஷ் கார்த்திக், டோனி, ரெய்னா என நீளும் துடுப்பாட்ட வரிசை எதிரணிப் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்துவிடும். அத்துடன் எந்தவொரு இலக்கையும் விரட்டிக்கொள்ளக் கூடிய துடுப்பாட்ட வரிசை அது. பந்து வீச்சில்கூட புவனேஸ்வர் குமார், ரவீந்திர ஜடேஜா, இசாந் சர்மா எதிரணியை மிரட்டுகின்றனர். இதில் இந்திய அணி வீரர்களின் களத்தடுப்புக்கூட என்றுமில்லாதளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கின்றது. இதில் களத்தடுப்பில் பலவீனமானவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் சிலரே. இதில் அஸ்வின், இசாந் சர்மாவைத் தவிர ஏனையவர்கள் களத்தடுப்பில் புலி போன்று செயற்படுவது பந்து வீச்சு பலவீனத்தைக்கூட நிவர்த்தி செய்கின்றது.

அதற்கும் அப்பால் தலைமையில் சாதனை படைக்கக்கூடிய அரிய வாய்ப்பை டோனி இலகுவில் கோட்டைவிட மாட்டார். ஏனெனில், ருவென்ரி-20 உலகக் கிண்ணம், 50 ஓவர் உலகக் கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் கிண்ண உலகக் கிண்ணத்தை வென்ற முதல் அணித் தலைவர் என்ற மைல்கல் டோனிக்குக் கிட்டியிருக்கின்றது. அதாவது இப்போட்டியில் வெல்வதன் மூலம் மேற்படி இந்த மூன்று வகையாக கிண்ணங்களையும் வென்ற முதலும் கடைசியுமான கப்டன் என்ற பெருமை டோனிக்கு கிட்டும். அந்த இலக்கை எட்டுவதற்கு டோனி கடும் முயற்சி எடுப்பார் என்பதில் ஐயமில்லை. அத்துடன் சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியிடம் அடைந்த டெஸ்ட் தோல்விக்குப் பழிதீர்த்துக்கொள்ளும் களமாகவும் டோனி பயன்படுத்திக் கொள்ள முற்படுவர்.

அந்த வகையில் வலுவான ஒரு போராட்டம் இன்றைய தினம் இடம் பெறவுள்ளது. இதில் எல்லா அஸ்திரங்களையும் பயன்படுத்தி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்ள இரு அணிகளும் போராடும். *

## கொன்பெடரேஷன் கோப்பை கால்பந்து

# ஸ்பெயின் கோல் மழை




(ரியோ டி ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் நடந்து வரும் கொன்பெடரேஷன் கோப்பை கால்பந்து போட்டித் தொடரின் பி பிரிவு லீக் ஆட்டத்தில், உலக சம்பியன் ஸ்பெயின் அணி 10-0 என்ற கோல் கணக்கில் தாஹிதி அணியை வீழ்த்தியது. ரியோ டி ஜெனிரோவில் நேற்று முன்தினம் இரவு நடந்த இப்போட்டியில், பலம் வாய்ந்த ஸ்பெயின் அணிக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய கற்றுக்குட்டி அணியான தாஹிதி எதிர்ப்பின்றி சரணடைந்தது. அந்த அணியின் கோல் பகுதியை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்திய ஸ்பெயின் வீரர்கள் கோல் மழை பொழிந்தனர்.

அந்த அணியின் பெர்னாண்டோ டொரஸ் 4 கோல் போட, டேவிட் வில்லா ஹாட்ரிக் கோல் போட்டு அசத்தினார். டேவிட் சில்வா 2, ஜுவன் மாட்டா ஒரு கோல் அடித்தனர். பதிலுக்கு ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் தாஹிதி வீரர்கள் ஏமாற்றமடைந்தனர்.

சர்வதேச கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு பிபா அங்கீகாரம் பெற்ற பெரிய சம்பியன்ஷிப் போட்டிகளில், இதுவரை எந்த அணியும் 10-0 என்ற கோல் கணக்கில் மிகப் பெரிய வெற்றியைப் பதிவு செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணி கப்டன்களில் என்னைக் கவர்ந்தவர் கங்குலி

(மும்பை)

இந்திய கப்டன்களில் என்னைக் கவர்ந்தவர் கங்குலி. அவுஸ்ரேலிய மண்ணில் அந்த அணிக்கெதிராக அவரது தலைமைத்துவச் செயல்பாடு வியப்புக்குரியது என மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் லாரா தெரிவித்தார்.

கங்குலி மீது எனக்கு நிறைய மரியாதை உண்டு. 1983ஆம் ஆண்டுகளில் எங்கள் அணி ஆதிக்கம் செலுத்தியது. மூன்றாவது உலக கோப்பை இறுதிப் போட்டியில் எங்கள் அணி எளிதில் வெற்றி பெறும் என்று எதிர்பார்த்து நான் விளையாடச் சென்று விட்டேன். திரும்பி வந்து பார்த்த போது இந்தியா கோப்பையை வென்றது தெரிந்தது. இந்த வெற்றியில் கபில்தேவின் பங்கு முக்கியமானது. எனது நண்பர் டெண்டுல்கர் கிரிக்கெட்டுக்கு செய்திருக்கும் செயல்களை யாரும் திரும்பசெய்ய முடியாது. இந்திய கிரிக்கெட்டுக்கும், உலக கிரிக்கெட்டுக்கும் டெண்டுல்கர் அளித்துள்ள பங்களிப்பை கணக்கிட முடியாது. இந்திய அணியின் தற்போதைய கப்டன் டோனி ஆட்டத்தை நன்கு கவனித்து செயற்படக்கூடியவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உசைன் போல்ட் தகுதி

(கிங்க்ஸ்டன்)

ஜமேக்காவின் கிங்க்ஸ்டன் நகரில் தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் ஜமேக்காவின் உலக சம்பியனான உசைன் போல்ட் முதலிடம் பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடக்கவிருக்கும் உலக சம்பியன் போட்டிக்கு தகுதி பெற்றார். 60மீற்றர் தூரம் தாண்டியதும் அனைவரையும் பின்னுக்குத் தள்ளி முதல் நிலை பெற்ற போல்ட், 9.94 வினாடிகளில் வெற்றிக்கோட்டைத் தொட்டார். வளர்ந்து வரும் வீரரும், போல்ட்டின் இணை பயிற்சியாளருமான கெமார் பெய்லி கோல் 9.98 வினாடிகளில் இரண்டாவதாக வந்தார். 9.99 வினாடிகளில் வந்து நிக்கல் அஷ்மெத், மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

அமெரிக்க சாம்பியன்ஷப் போட்டியில் 9.75 வினாடிகளில் முதலாவதாக வந்த டைசன் கேயுடன் இணைந்து பயிற்சி பெறுபவர் ஆவார். தனது சாதனை குறித்து போல்ட் கூறியதாவது:-

இறுதிப்போட்டியில் என்ன நடைபெறுகின்றது என்பதே முக்கியம். ஏற்கனவே நான் 9.63, மற்றும் 9.58 வினாடிகளில் ஓடி தகுதிச் சுற்றினை நிரூபித்துள்ளேன் என்றார்.

## விம்பிள்டன் ரென்னிஸ் எப்பொழுதும் சிறப்புத்தான்



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் எனக்கு எப்பொழுமே சிறப்பானதுதான். இந்த முறை சிறப்பாக ஆடி கிண்ணத்தை வெல்ல முயற்சிப்பேன் என போலந்து நாட்டின் ரென்னிஸ் வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா தெரிவித்தார்.

சமீபத்தில் நடந்த பிரெஞ்ச் ஓப்பன் தொடரில் காலிறுதியில் சாரா இரானியிடம் தோற்றது, ஏமாற்றமாக இருந்தது. இதற்கு விம்பிள்டனில் பரிகாரம் தேட முயற்சிப்பேன். எங்கள் நாட்டில் புல் தரையில் உள்ள களம் இல்லை.

எனவே, முதன் முதலாக 16ஆவது வயதில், விம்பிள்டன் தொடரில் விளையாடியதுமறக்க முடியாதது. செரீனாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் அதிக பதற்றமாக இருந்தேன். தோல்விக்கு இதுவும் காரணமாக அமைந்தது. விம்பிள்டன் தொடர் எப்பேதுமே சிறப்பானது என்பதால், இம்முறையும் உற்சாகத்துடன் விளையாடுவேன்.

கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்பதே விளையாடும் எல்லோரதும் இலக்கு. அதேபோன்றுதான் எனக்கும் இருக்கும். ஒவ்வொரு போட்டியையும் அதன் சூழலுக்கு ஏற்றதுபோன் விளையாடுவதுதான் முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார்.



# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம் மானிப்பாய் பரிஸ் அணி வசம்

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ண கிண்ணத்தை மானிப்பாய் பரிஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரை நடாத்தியது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொண்டபோதும் தொடரின் இறுதிப் போட்டிக்கு மானிப்பாய் பரிஸ் அணியும், ஜொனியன்ஸ் அணியும் தகுதிபெற்றன. இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஸ் அணி, ஆரம்பத்தில் சிறிதரன், லக்ஸ்மன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் இணைந்த சுபாஸ்கரன், வினோத் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டனர். இறுதியில் மானிப்பாய் பரிஸ் அணி 25.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோத்- 39, சுபாஸ்கரன் 30, ஹரிகரன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிறிதரன், லக்ஸமன் தலா மூன்று, லவேந்திரா, துவாரகேசவன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி ஆரம்பத்திலேயே தடுமாறத் தொடங்கியது. ஹரிகரனின் முதல் ஓவரிலேயே ஓட்டங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. தொடர்ந்து சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை ஜொனியனீஸ் அணி பறிகொடுத்தது. இறுதியில் ஜொனியன்ஸ் அணி 22.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சஞ்சயன் 28, சிறிதரன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிசோகுமார் 18 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, யாழினியன், ஹரிகரன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் மானிப்பாய் பரிஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இறுதிப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மானிப்பாய் பரிஷ் அணியின் வினோத், சிறந்த பந்து வீச்சாளராக அவ்வணியின் கிசோகுமார், சிறந்த களத் தடுப்பாளராக ஜொனியன்ஸ் அணியின் ரட்ணம், இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பரிஷ் அணியின் கிசோ-குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (42)

# மகிந்தன் வெற்றிக் கிண்ண கால்பந்து இறுதியில் பாடுமீன், ஞானமுருகன்

(யாழ்ப்பாணம்)

மகிந்தன் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் மற்றும் பாடுமீன் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து பாடும்மீன் நீல அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் ஆட்டத்தின் பெரும் பங்கை தன்வசம் வைத்திருந்த ஞானமுருகன் அணி அடுத்தடுத்து மூன்று கோல்கள் போட்டது.

பதிலுக்கு பாடுமீன் நீல அணி ஒரு கோல் போட, முதல் பாதியாட்டம் 3:1 என்ற கோல் கணக்கில் ஞான-முருகன் முன்னிலையில் முடிவுற்றது. பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தின. இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டன. இறுதியில் ஞானமுருகன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியினை எதிர்த்து பாடுமீன் மஞ்சள் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒரு கோல் பெற்று சமநிலையில் இருந்தன.

இரண்டாவது பாதியாட்டம் விறுவிறுப்பாக அமைய, இரு அணிகளும் மாறிமாறி ஒரு கோலினைப் பெற்று சமநிலையில் நீடித்தன. ஆட்டநேரம் முடியும்போது இரு அணிகளும் 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையிலிருந்தன. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பாடுமீன் மஞ்சள் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

## விளையாட்டுச் செய்திகள்

# இளைஞர் விளையாட்டு விழா இன்று இறுதி நாள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட காரியாலயத்துடன் இணைந்து நடாத்தும் நடப்பாண்டுக்கான மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இன்று மாலை 2.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.லக்ஷின் தலைமையில் இடம்பெறும் இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால, யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் மோகன், கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் வட மாகாணப் பணிப்பாளர் விமலேஸ்வரி ஸ்ரீஸ்கந்தரூபன், மாநகர சபை உறுப்பினரும் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் மற்றும் கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவர் செ.ரமணன், தேசிய இளைஞர் சேவை-கள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவினதும் இருபாலாரிற்குமான 100மீற்றர் இறுதி நிகழ்வும், அஞ்சல் ஓட்டமும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களது இடைவேளை உடற்பயிற்சிக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

# குணதீபன் சிறப்புப் பந்து வீச்சு கிண்ணம் வென்றது ஞானம்ஸ்







(புத்தூர்)

குணதீபனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மாலுசந்தி மைக்கல் அணியை வீழ்த்திய கரவெட்டி ஞானம்ஸ் அணி புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடாத்திய வருடாந்த மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் மைக்கல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பாடிய மைக்கல் அணி, குணதீபனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மைக்கல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. ரகுபதி 25, கபிலன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குணதீபன் ஐந்து, ஜீவகன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணியினர் 19.1 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுகந்தன் 18, துஷ்யந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தினோஜன் நான்கு, கபிலன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை ஞானம்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணி வீரர் குணதீபனும், தொடர் நாயகனாக மைக்கல் அணி வீரர் திருபரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(எஸ்.பி.)

# யாருக்கும் வெட்கமில்லை

- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.



இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் அரசியல் அதிகாரத்தில் தமிழர்களின் வகிபங்கு உறுதிபடுத்தப்பட வேண்டும் என்பதே சுமார் முப்பது வருட கால போராட்டத்தின் அடிப்படையாக இருந்து வந்துள்ளது. இப்போராட்டத்தின் பெயரால் வடக்கு, கிழக்கு பிரதேச மக்கள் சொல்லொண்ணா துயரங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் மக்களின் தியாகங்கள் அனைத்தையும் அரசியல் ரீதியில் மக்களுக்கான வெற்றிகளாக மாற்றிக் கொள்வதில் தமிழ் தலைமைகள் தோல்வியையே தழுவியிருக்கின்றன. இழந்தவை மலைபோல் இருக்க பெற்றுக் கொண்டவை கடுகளவு மட்டுமேயாகும். இதற்கு இதுவரை காலமும் எமது மக்களை வழி நடத்திய மிதவாத தலைமைகள் மற்றும் தீவிரவாத் தலைமைகள் கடைப்பிடித்த பிழையான அணுகுமுறைகளே காரணமாகும்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவான அதிகாரப் பரவலாக்க முறையே மாகாண சபைகள். அன்று அதனை குறித்தொதுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களுடனும் இயங்கும் வாய்ப்பை புலிகள் அழித்தொழித்தனர். ஆனாலும் மீண்டும் அதுவே தஞ்சமென இன்று தமிழினம் காத்து கிடக்கிறது. ஏனெனில் இத்தனை போராட்டங்களுக்குப் பின்னர் இன்று எமது மக்களுக்கு எழுத்து ரீதியாக எஞ்சியிருக்கின்ற ஒரே தீர்வு மாகாண சபை முறையிலான அதிகாரப் பரவலாக்க வடிவம் மட்டுமேயாகும். அதுகூட தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடமாகாண மக்களை இன்னும் சென்றடையவில்லை. கிழக்கு மாகாணத்தில் இந்த மாகாண சபை முறைமை அமுலில் இருந்தாலும் அது தன்னுடைய முழு அதிகாரங்களையும் கைப்பற்றிக்கொள்ளும் வல்லமையை எட்டவில்லை.

இந்த நிலையில் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்கின்ற அறிவிப்பு தமிழ் மக்களின் மனதில் மிகப்பெரிய எதிர் பார்ப்புகளை உருவாக்க தொடங்கி உள்ளது. எமது தலைமைகள் இத்தேர்தலை எப்படி பயன்படுத்த வேண்டும்?

குறைந்த பட்சம் கிடைக்கக் கூடிய அதிகாரங்களையாவது பெற்றுக் கொண்டு மக்களின் வாழ்வை மேம்படுத்துவது எப்படி? என்றவாறாக பொறுப்புடன் சிந்திப்பதாக தெரியவில்லை. அவற்றை விட தத்தமது சொந்த நலன்களும், கட்சிசார் நலன்களுமே வடமாகாண சபை தேர்தலை ஒட்டி மேலோங்கி காணப்படுகிறது. யார் முதலமைச்சர் ஆவது என்கின்ற போட்டியில் வடக்கில் இவர்கள் சுழியோடிக் கொண்டிருக்க கொழும்பில் இனவாத சிந்தனைகள் ஆட்சியாளர்களை சுற்றி ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளன.

13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யுமாறும் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஜே.வி.பி கோருகிறது. அரசில் பங்கெடுக்கின்ற பலவிதமான பேரினவாத கட்சியினர் வடமாகாண சபை ஒன்று குறைந்த பட்ச அதிகாரங்களுடன் இயங்க முனைவதையிட்டு அச்சம் தெரிவிக்கின்றனர். இது போன்ற பலவித காரணங்களையிட்டும் அரசாங்கம் 13 ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வலுவிழக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. மாகாண அரசுகளின் பட்டியலில் உள்ள அதிகாரங்களில் மத்திய அரசு, சட்டம் கொண்டுவர விரும்பினால் தற்போது அனைத்து மாகாணங்களும் அங்கீகரித்தால் மட்டுமே அது சட்டமாகும் என்ற நிலையை மாற்றி பெரும்பான்மை மாகாணங்கள் அங்கீகரித்தாலே போதும் என்ற நிலையை உருவாக்கவும் அரசு ஒரு உத்தேச திட்டத்தை முன்வைக்கப்போவதாகத் தெரிகிறது.

உண்மையிலேயே இம்முயற்சியானது தமிழ் மக்கள் அரசின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கச்செய்யும் ஒரு செயற்பாடாகும்.

அரசில் அங்கம் வகிக்கின்ற மூத்த அரசியல்வாதிகள் பலர் அரசின் இந்த முயற்சி தவறானது கைவிடப்பட வேண்டியதே என வாதிட்டு வருகின்றார்கள். குறிப்பாக வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரட்ன போன்றோர். அதே போன்று அரசில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் அரசின் இம்முயற்சியை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என தெரிவித்து வருகின்றனர். “13ஆவது சட்டத்திருத்தத்தின் சில நன்மையான அம்சங்களை முழுமையாக இல்லாமல் செய்வதற்கான ஒரு வழியாகவே இதை நாங்கள் பார்க்கிறோம். இந்த முயற்சியை அரசு திணிக்க முயன்றால் அதை சிறுபான்மைக் கட்சிகள் தொடர்ந்து எதிர்க்கும்” என்றார் ரவூப் ஹக்கீம். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களை கொண்டுவரவிருக்கும் அரசாங்க யோசனைகளை பரிசீலிப்பதற்காக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி குழுவொன்றை நியமித்துள்ளது. அரசாங்கத்தின் யோசனையால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பற்றி ஆராயவே இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எனினும் அரசில் அங்கம் வகிக்கின்ற சிறுபான்மை கட்சிகளின் இந்த எதிர்ப்புகள் எவ்வளவு தூரம் அரசின் அணுகுமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் சாத்தியப் பாடுகளை கொண்டிருக்கின்றன என்பது கேள்விக்குறியே. காரணம் இவர்கள் தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்றவர்கள் அல்லர். அவர்கள் கொண்டுள்ள இணக்க அரசியல் என்பது ஒரு பேரம் பேசும் அரசியலாக மாறுவதற்குரிய மக்கள் ஆணை கடந்த காலங்களில் அவர்களுக்கு கிடைக்காமையே அதற்கு காரணமாகும். தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவை கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இந்நிலைமைகளை பொறுப்புடன் அணுக வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள் ஆக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு ஆளைஆள் குற்றம் சுமத்திக்கொண்டு அறிக்கை விடுவதற்கே நேரம் போதவில்லை. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கண்டாலும் இந்தக் கூட்டமைப்பினரின் கட்சியை பதிவு செய்யும் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது. பாவம் தமிழ் மக்கள் இந்தத் தலைவர்களுக்கு வாழ்க்கைப்பட்டு இப்படி அல்லலுற வேண்டியிருக்கிறது. யாருக்கும் வெட்கமில்லை.




## தங்க வேட்டை

உலக சந்தையில் தங்கத்தின் விலை இப்போது சரிந்திருக்கிறது. ஆனாலும் தங்கம் எப்போதுமே பெரும் மதிப்புள்ள பொருளாக இருந்துள்ளது. பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த விலையை விட இன்று அதன் விலை நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இயற்கையிலிருந்து தங்கத்தை எடுக்கும் செலவும் நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது.

வெறும் அலங்காரமாகக் கழுத்திலும் காதிலும் தொங்கிக் கொண்டிருப்பதோடு மருத்துவ தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் அதற்கு உபயோகம் உண்டு. சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் தங்கம் தவிர புதிய இடங்களிலும் விஞ்ஞானிகள் அதைத் தேடி வருகிறார்கள்.

பூமிக்கு அடியில் தேடுவது மட்டுமல்லாமல், கடலுக்கு அடியிலும் மலைச் சிகரங்களிலும் தங்கத் துகள்களை சுரண்டியெடுக்க ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன.

நாம் உபயோகம் தீர்ந்ததென்று தூக்கி எறியும் எலக்ட்ரோனிக் சாதனங்களில் உள்ள தங்கத்தைச் சுரண்டி, தங்கம் எடுப்பது ஒரு முறை. நாளுக்கு நாள் மலை மலையாகக் குவிந்துவரும் எலக்ட்ரோனிக் குப்பை தங்கம் கிடைக்கும் ஒரு முக்கிய இடமாகிவிட்டது. மொபைல் போன், கம்ப்யூட்டர் போன்ற ஒவ்வொரு எலக்ட்ரோனிக் சாதனத்திலும் பயன்படுத்தப்பட்ட மிகச் சிறிய அளவு தங்கத்தை எடுத்தாலே கணிசமான அளவு கிடைக்கிறது.

தங்க வேட்டையில் இப்போது தீவிரமாக நடப்பது - நுண்ணுயிரிலிருந்து தங்கம் எடுப்பது தான். இதில் சில விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். சாதாரண உயிரினங்கள் இருக்கவே முடியாத சுரங்கங்கள் போன்ற கடுமையான சூழலில் வாழும் நுண்ணுயிரிகளுக்கும் தங்கம் உருவாவதற்கும் தொடர்பு இருக்கிறதா? என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

சில வகை நுண்ணுயிர்களைத் தங்க குளோரைடில் சேர்த்தால் அவற்றின் உடலிலிருந்து நனோ துகள் அளவு தங்கம் வெளியேறுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடல் நீரில் உள்ள தங்கக் குளோரைடிலிருந்து தங்கம் எடுக்கும் முறைகளை இந்திய விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். தங்கத்தை வெளியேற்றும் நுண்ணுயிர்களைத் தேடும் பணி படுதீவிரமாக நடக்கிறது. இதற்காகக் கடலுக்கு அடியில் வாழும் நுண்ணுயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி நடக்கிறது. தங்கத்தை வெளியேற்றும் திறனுள்ள பதினைந்து வகை நுண்ணுயிர்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.





Image courtesy: Mid Day.Com

## அமீன் ரஹ்மான்

வயது 10. இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் மகன். தந்தையைப் போலவே இசையில் ஆர்வம்.

கடந்த டிசம்பர் மாதம் சென்னையில் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்ச்சியில் மேடையில் அமீனின் இசைப் பங்கேற்பு நிகழ்ந்தது. பார்வையாளர்களின் ஒட்டுமொத்த பார்வையையும் அங்கே பியோனோ வாசித்து தன் பக்கம் திருப்பினார் அமீன்.

ஆறு வயதிலிருந்தே இசை கற்க ஆரம்பித்த அமீன், ஹொலிவுட் படத்தில் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் குழந்தைகளை வைத்து ஓர் இசைத்தொகுப்பை வெளியிட்டார். அதில் இடம் பெற்றவர்களில் அமீன் ரஹ்மானும் ஒருவர்.



# வேடிக்கையான மனிதர், அப்பா!

– ஸ்ருதி ஹாசன் –


நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் சென்னையில்தான். என்னுடைய அப்பா அய்யங்கார். அம்மா மராத்தி - ரஜ்புத் கலவை. எனக்கு ஐந்து வயதாகும்போது என்னுடைய தந்தையும் தாயும் திருமணம் செய்துகொள்ளும் காட்சியை காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் திருமணம் ஆகாமலேயே கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தாலும் என்னுடைய அம்மா இரண்டாவது முறையாக கருவுற்றிருந்தபோது முறைப்படி திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினாராம். என்னுடைய தங்கை அக்ஷரா பிறந்தவுடன் வீட்டிலேயே அழகான சூழலில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். திருமண நாளன்று நான் எதிலும் நாட்டமில்லாமல் மிகவும் அப்செட்டாகியிருந்ததாக அம்மா கூறினார்.

எங்களுக்கென்று தனி அடையாளம் ஏதும் இருக்கக் கூடாதென்று அம்மா விரும்பியதால் நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு செல்லும்போது பஸ்ஸில்தான் சென்றோம்.

என்னுடைய பெற்றோர்கள் பிரிந்திருக்கிறார்கள் என்பது மட்டுமே சின்னஞ்சிறு வயதில் தெரியும். அவர்களிருவரும் தனித்தனி வாழ்க்கையை விரும்புகிறார்கள் என்பதும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் குறுக்கிடக்கூடாது என்பதையும் அந்த இளம் வயதில் நான் புரிந்துகொண்டேன். அவர்கள் ஒன்றாக இருக்கிறார்களா? மகிழ்ச்சியோடு இருக்கிறார்களா? என்பது குறித்து நான் கவலைப்பட்டதில்லை. சமூகத்தில் புகழ்பெற்ற தம்பதிகளின் குழந்தைகளாக இருக்கும்போது இது பிரச்சினையாக தோன்றலாம். ஆனால் அது அவர்களுடைய சொந்த பிரச்சினை. அதில் தலையிட எனக்கு என்ன உரிமை இருக்கிறது? சங்கீதத் துறையை தேர்ந்தெடுத்தேன்.

எனக்கு பதினைந்து வயதாகும்போது என்னுடை அம்மா என்னையும் அக்ஷராவையும் அழைத்துக்கொண்டு சென்னையில் தனி அபார்ட்மென்ட் ஒன்றில் குடியேறினார். அப்போது முதல் அம்மா பொருளாதாரரீதியில் சுதந்திரமாக இருந்தார். என்னுடைய அம்மா உறுதியான பெண்மணி. இருபது ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் நடிக்கத் தீர்மானித்தார். தேசிய விருது பெற்றார். நானும் இப்போது ஒரு நடிகை. என்னைப் பொறுத்தவரை அவர் எனக்கு தாய் மட்டுமல்ல, நல்ல தோழியும் கூட. எங்களுடைய உறவு வலுவாக உள்ளது. சமையலில் மிகவும் திறமைசாலியான அவர் எனக்கு உறுதுணையாகவும் இருக்கிறார். அவர் ஒரு சாதாரண பெண்மணி. மிகவும் உணர்ச்சிவசப்படக்கூடியவர். தன்னுடைய குழந்தைகள் என்ன நினைப்பார்களோ என்ற அச்சம் அவருக்குண்டு.

என்னுடைய தந்தையைப் பொறுத்தவரை அவர்தான் எனக்கு மிகப்பெரிய இன்ஸ்பிரேஷன். அவருக்கு தெரியாதது எதுவுமே இல்லை என்பது எல்லோருக்குமே தெரியும். 60 வயதிலும் கடினமாக உழைப்பவர் அவர். காலையில் எழுந்தது முதல் அவருடைய சிந்தனை எல்லாமே சினிமாதான். உண்மையில் அவர் ஒரு வேடிக்கையான மனிதர்.



# முட்டைகள்...

★ அமெரிக்காவில் வால் இல்லாத சில கோழி இனங்கள் நீல நிற முட்டைகளை இடும்.

★ நியூகினியாவில் உள்ள காசோவரி எனப்படும் வான்கோழி இனப்பறவைகள் பசுமை நிற முட்டைகளை இடும்.

★ அன்னப் பறவை பசுமை கலந்த வெண்ணிறத்தில் முட்டையிடும்.

★ ஜப்பானிலுள்ள குயில்களின் முட்டைகள் சிவப்பு நிறத்தில் இருக்கும்.

★ ஆபிரிக்காவிலுள்ள ஜிங் இனக் கோழிகளின் முட்டைகள் சிவந்த மஞ்சள் நிறத்தில் கரும்புள்ளிகளுடன் இருக்கும்.

★ பிணந்தின்னிக் கழுகுகளின் முட்டை சிவப்பு கலந்த பழுப்பு நிறம்.

★ புள்ளிகள் மற்றும் கோடுகள் கொண்ட முட்டைகளை பவழக்கால் நாரைகள் இடும்.

★ வரகு கோழிகளின் முட்டைகள் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

★ கருடனின் முட்டை சாம்பல் நிறம்.

★ கடல் அர்ச்சின் என்ற பறவை செம்மஞ்சள் நிற முட்டைகளை இடும்.


★ செந்தலைக் கிளிகளின் முட்டைகள் வெண்ணிறத்தில் கோள வடிவில் இருக்கும்.

# கப்பலில் செல்லும் ரயில்!

சீனாவில் கடல் நீரால் பிரிக்கப்பட்டுள்ள குவாங்டாங், ஹைனான் ஆகிய மாகாணங்களை இணைக்கும் ரயில் பதை 345 கிலோமீற்றர் நீளம் கொண்டது.

இந்த ரயில் பாதை மூன்று பிரிவுகளைக் கொண்டது. ரயில் பாதையின் இரண்டு பிரிவுகள் குவாங்டாங், ஹைனான் மாநிலங்களில் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு நிலப் பகுதிகளையும் கியாங்ஷோ என்ற நீர்சந்தி பிரிக்கிறது. அதாவது இந்த இரண்டு மாநிலங்களுக்கிடையே நீர்ப்பரப்பு இருக்கிறது.

முதலில் நிலத்தில் பயணம் செய்யும் ரயில் இந்த நீர்சந்திக்கு வந்தவுடன் நிற்கும். அங்கிருந்து இந்த ரயில் ஒரு கப்பலில் பயணம் செய்கிறது. அந்தக் கப்பல் 164 மீற்றர் நீளமும் 22 மீற்றர் அகலமும் கொண்டது. இந்தக் கப்பலில் ரயிலை நிறுத்துவதற்காக பிரத்தியேகமான இருப்புப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. ரயில் இந்த இருப்புப் பாதையில் ஏறியவுடன் கப்பல் புறப்படும். இது 24 "கடல் மைல்" தூரத்தில் உள்ள மற்றொரு கரைக்கு வந்து சேரும். அங்குள்ள தரை இருப்புப் பாதையுடன் கப்பலில் உள்ள இருப்புப் பாதை மிகுந்த கவனத்துடன் துல்லியமாக இணைக்கப்படும்.



பின்னர் அந்த ரயில் கப்பலிலிருந்து வெளிவந்து, நிலத்திலுள்ள இருப்புப் பாதையில் பயணித்து தனது சேருமிடமான ஹைனான் மாகாணத்தைச் சென்றடையும்.

இந்த அதிசய ரயில் போக்குவரத்து 2004ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இன்றுவரை தொடர்ந்து வெற்றிகரமாக நடந்து வருகிறது.

# தார்மீக வலுவிழந்த தமிழ் அரசியல் சூழல்

(தியாகிகள் தினத்தையொட்டி பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையிலிருந்து...)

தமிழ் சமூகத்தின் தேசிய விடுதலையுடன், இலங்கையில் சமூக பொருளாதார விடுதலையையும், ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களாக இருக்கக்கூடிய சர்வதேச சமூகத்தின் நட்புறவுக்காகவும் வாழ்ந்து தமிழ் சமூகத்தினுள் வேரூன்றிவிட்ட பாசிசத்தின் படுகொலைத் தாக்குதலில் பன்னிரு தோழர்களுடன் பலியாகியவர் தோழர் பத்மநாபா. ஆளுமைமிக்க தோற்றமும், தீட்சண்யமான பார்வையும் மலையென சவால்கள் எழுந்தாலும் "நோ புரொப்ளம்" என்று சொல்லி வாழ்ந்து மடிந்தவர் தோழர் பத்மநாபா. அவர் ஒன்றரை தசாப்தங்களாக மக்களின் விடிவுக்காக உழைத்து தனது 39 வயதில் மரணம் என்னும் சவாலை எதிர்கொண்டார்.

தமிழ் சமூகத்தின் உன்னதமான தலைவர்களெல்லாம், மக்களை நேசித்த மனிதர்களெல்லாம் இவ்வாறுதான் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மகா புருஷன் எனப்படுபவன் ஏனையோரை விட தீர்க்கதரிசனம் மிக்கவன் என்றார் ரஷ்ய தத்துவ் ஞானி பிளக்கனோவ். இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை உருவாக்குவதில் அவர் தீர்க்கமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அவருடைய அரசியல் தூரதிருஷ்டி - ஒரு பேரழிவில் இருந்து சமூகத்தை காப்பாற்றும் அக்கறையைக் கொண்டிருந்தது. அவர் மலையக மக்களை பெரிதும் நேசித்தார். இலங்கையில் நடக்கும் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்கை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரான சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், தேசிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், ஒடுக்குமுறைக்குள்ளான பெண்கள் அத்தனை சமூக பிரிவினர் மீதும் அதீத ஈடுபாட்டை காட்டினார். தோழமை என்றால் என்ன என்பதற்கு அவர் ஒரு வாழும் உதாரணமாக திகழ்ந்தார். அவருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மக்களே அவர் எத்தகைய மானிடர் என்பதற்கு சான்று பகன்றன.

அவர் மிகவும் அழகான கனவை கொண்டிருந்தார் அது மனித குலத்தின் மகிழ்ச்சியான வாழ்வு என்பது மாத்திரம்தான். அதற்காக அவர் முழுமையாக தன்னை அர்ப்பணித்திருந்தார். சமூகத்தினதும் ஸ்தாபனத்தினதும் வளர்ச்சிக்காக அவர் நேர காலம் பாராது உழைத்தார்.

நாபாவும் மறைந்த தோழர்களும், கண்ட கனவுகளுக்கும் இன்றைய யதார்த்தத்திற்குமிடையிலான இடைவெளி நெஞ்சு பொறுக்கமுடியாத அளவில் காணப்படுகிறது.

இன்று தமிழ் அரசியல் சூழல் என்பது அயோக்கியர்களின் கூடாரமாக மாறியிருக்கிறது என்பதை மிகுந்த தன்னடக்கத்துடன் உரைக்க வேண்டியிருக்கிறது.

நேர்மையானவர்கள், உண்மையானவர்கள் எள்ளி நகையாடப் படுவதான சூழல் உருவாகியிருக்கிறது முற்போக்கான மக்கள் சார்ந்த அரசியல் பாரம்பரியம் உருவாகுவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம்.


தார்மீக உணர்ச்சி சிறிதும் இல்லாமல் கிடைப்பதைச் சுருட்டிக் கொள்வது, சூறையாடல், மக்களை ஏமாற்றுதல் என்ற போக்கு அதிகரித்திருக்கிறது.

போராட்டத்தில் உயிரை இழக்கச் சித்தமாக இருந்தவர்களும் இவர்களும் ஒரே மக்கள் பிரிவினர் அல்ல.

தமிழர்களின் போராட்டத்தின் பாசிச கூறுகளும் பேரினவாதமும் சமூகத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கியுள்ளன.

உன்னதமான முற்போக்கான பரந்த எண்ணங்கொண்ட தலைமைத்துவ மரபு ஒன்று தலை முறிக்கப்பட்டுள்ளது. அது தளிர் விட வேண்டும்.

ஒரு புதிய தலைமுறை பிரகாசமான தலைவரின் பேரிழப்பு ஈடுசெய்யமுடியாத வெற்றிடம் அது. ஹிட்லரின் நாசிசம் ஜேர்மனியினதும் ஐரோப்பாவினதும் மாபெரும் தலைவர்களை எவ்வாறு காவு கொண்டதோ அவ்வாறுதான தமிழ் பாசிசமும் தோழர் நாபாவை காவு கொண்டது. அவர் சேகுவேரா, கொங்கோவின் விடுதலை வீரர் பற்றிஸ் லுமும்பா மண்டேலா போன்ற தலைவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவர். வரலாறு இம் மகத்தான மனிதனை என்றோ ஒரு நாள் முன்னிறுத்தும். தற்போதைய சமூக முன்னேற்றத்துக்கு எதிரான சக்திகள் அன்று வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இருப்பார்கள்.



# உலகின் மிக மெல்லிய ஸ்மார்ட் செல்பேசி



உலகின் மிக மெல்லிய ஸ்மார்ட் போனை சீனாவின் ஹுஹாவி அறிமுகப்படுத்தியுள்ளது. இது வெறும் 6.18 மில்லிமீற்றர் தடிப்பானது என ஹுஹாவி தெரிவிக்கின்றது. இதுவே உலகின் மிக மெல்லிய ஸ்மார்ட் போன் எனவும் ஹுஹாவி குறிப்பிடுகின்றது. Huawei's Ascend P6 என அழைக்கப்படும் இம்மாதிரி 4.7 அங்குல எல்.சி.டி. திரை. , 1.5GHz quad-core CPU மற்றும் 2GB RAM ஆகியவற்றையும் கொண்டுள்ளது. அண்ட்ரோய்ட் ஜெலி பீன் மூலம் இயங்குகின்றது. இதுமட்டுமன்றி 8 மெகா பிக்ஸல் ரியர் கமராவைக் கொண்டுள்ளதுடன் 5 மெகா பிக்ஸல் முன் கமராவையும் கொண்டுள்ளது.

தொலைத்தொடர்பாடல் சாதனங்களைத் தயாரிப்பிலும் ஈடுபடும் ஹுஹாவி நிறுவனமானது ஸ்மார்ட் போன் சந்தையிலும் பிரபல்யம் பெற முயன்று வருகின்றது.




# பேஸ்புக் தரும் புத்தம் புதிய வசதி




பேஸ்புக்கில் ஒருவர் போடும் ஸ்டேடஸிற்கு கருத்துத் தெரிவிக்கும் போது கமெண்ட் போடுவதென்றால் பலருக்கு அதிக விருப்பம் அதிலும் போட்டோவுடன் கமெண்ட்ஸ் போடலாமென்றால் கேட்கவும் வேண்டுமா? ஆம், பேஸ்புக்கில் இனி ஒருவர் பகிரும் ஸ்டேடஸ் போன்ற விடயங்களுக்கு கமெண்ட்ஸ் செய்யும் போது படங்களுடன் கமெண்ட் வழங்க முடியும். இவ்வசதியை பேஸ்புக் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. எனினும் பேஸ்புக் இணையத்தளத்திற்கு மட்டுமே இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, மொபைல அப்ளிகேஷனில் இவ்வசதி தற்போதைக்கு இல்லையென பேஸ்புக் தெரிவித்துள்ளது. ஆனால் மொபைல் அப்ளிகேஷனில் கமெண்டுடன் கூடிய படத்தைப் பாவனையாளர்கள் பார்க்கமுடியும்.

இது இளைஞர்களை வெகுவாகக் கவரும் என பேஸ்புக் நம்பிக்கை தெரிவித்துள்ளது. அண்மையில் பேஸ்புக் ஹேஸ்டெக் வசதியை அறிமுகப்படுத்தியிருந்தது. ஒரு விடயம் தொடர்பான ஹேஸ்டெக்கினை கிளிக் செய்வதன் ஊடாக அது தொடர்பில் மற்றையோரின் கருத்து என்ன என்பதனை தொடர்பில் அறிந்துகொள்ளமுடியும்.

# மின்னல் வேகத்தில் கண்களைத் தாக்கும் கணனி



இன்றைய பறக்கும் யுகத்தில் கணனி பக்கத்தில் அமர்ந்தபடி தான் எல்லா வேலைகளும் செய்து முடிக்கப்படுகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இது உற்சாகத்தை அளிக்கக்கூடியது என்றாலும் உடல்நலத்துக்கு கேடு என்கிறது மருத்துவ ஆய்வு. கணனி முன் அமர்ந்து பணி செய்பவர்களில் ஆண்கள் தான் அதிகம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீங்களும் அந்த வரிசையில் உள்ளவர்கள் என்றால் இதைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள். கணனி முன் அதிகநேரம் அமருபவர்களுக்கு முதல் பாதிப்பு ஏற்படும் பகுதி கண்தான். ஆகையால் அதில் இருந்து தப்பித்துக் கொளள சில வழிகள்....


முதலில் அதிக நேரம் கணினியைப் பார்ப்பவர்கள் கண்கள் மேல் கவனம் செலுத்த வேண்டும். மிக பக்கத்தில் இருந்து கணனி திரையில் வெளிச்சத்தை பார்ப்பதால் கண்கள் பாதிப்படைய நிறைய வாய்ப்பிருக்கிறது. இதனால் 15 நிமிடத்திற்கு ஒரு முறை கண்களுக்கு ஓய்வு கொடுப்பது நல்லது. அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களுக்கு இது சாத்தியப்படாது. ஆனால் இதற்கும் வழி இருக்கிறது. உள்ளங்கையை கண்கள் மேல் வைத்து ஒரு இரண்டு நிமிடம் ஓய்வு கொடுக்கலாம். இது ஓரளவு கண்களை பாதிப்பில் இருந்து காப்பாற்றும்.

தொடர்ந்து கணனி முன்பு வேலை செய்யும் நபர்கள் இடை இடையே கைகளையும், உடலையும் நீட்டி மடக்கி சிறிய உடற்பயிற்சி செய்து கொள்வது மிக நல்லது. கணனியின் முன் அமர்ந்து டைப் செய்கையில் உடலை நேர்கோட்டில் வைத்திருப்பது மிக அவசியமான ஒன்று. இதனால் முதுகுத்தண்டு நேராக இருக்கும் இதுபோல் செய்தால் உடல் வலி அதிகம் வருவதை தவிர்க்கலாம். பாதங்களை தரை மீது சமமாக வைத்திருப்பது இன்னும் சிறந்தது. உடலின் அனைத்து பலமும் பாதத்தின் மேல் இருப்பதால் பாதத்தை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

டைப் செய்யும் போது முழங்கைகளை இடையில் பக்கத்தில் வைத்திருப்பதால் கைகளுக்கு சிறப்பான பலன் கிடைக்கும். இதனால் சரியான முறையில் அமர்ந்து டைப் செய்ய முடியும். அதோடு தோள்பட்டை வலியையும் எளிதாக குறைக்கலாம். கணனி திரையில் வெளிச்சத்தை குறைத்து வைத்துக் கொள்வது மிக அவசியமான ஒன்றாகும். இதனால் கண்களை எளிதாக பாதுகாக்கலாம். இந்த 6 செயல்களையும் செய்து கணனி பாதிப்பில் இருந்து கண்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தவறவிட்டால் கண் கெட்ட பிறகு சூரியநமஸ்காரம் செய்வது போன்ற நிலை தான் ஏற்படும்..

# பறக்கும் பலூன்கள் மூலம் இணைய இணைப்பு!

பிற்காலத்தில் எங்கேனும் இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்டு தகவல் தொடர்புகள் கிடைக்க இயலாத நிலையில் ஆகாய மார்க்கமாக மீட்புப் பணிகளில் ஈடுபட உதவக்கூடும் வகையில் ஒரு புதிய முயற்சியில் இறங்கி உள்ளது கூகுள் நிறுவனம். அத்துடன் இதன் மூலம் இன்ரநெற் பயன்பாட்டை அனைத்து மக்களும் எப்போதும் பெறும் விதத்தில் செயற்படப் போகும் ஒரு புதிய முயற்சி என்றும் கூகுள் நிறுவனம் இதைக் குறிப்பிடுகிறது. அதாவது ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட 30 பலூன்களில் இணையத்தள தொடர்புகளை அளிக்கக் கூடிய கருவிகள் பொருத்தப்பட்டு விண்வெளியில் பறக்கவிடப்பட்டுள்ளது. அவற்றின் பாதை தரையிலிருந்து கட்டுப்படுத்தப் படும். இதன் மூலம் இதுவரை எந்த வசதிகளுமில்லாத தொலைதூரப் பகுதிகளில் வசிப்பவர்கள் கூட இனி இணையத் தள வசதிகளைப் பெறமுடியுமாம்.



மிக விரைவில் மக்கள் இதனைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு இதன் டெக்னோலஜி அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஹீலியம் பலூன்கள் இன்று நியூசிலாந்து நாட்டில் உள்ள கிரைஸ்ட்சர்ச் என்ற இடத்திலிருந்து பறக்க விடப்பட்டுள்ளன. இவை ஆகாய விமானங்களை விட இரண்டு மடங்கு உயரத்தில் பறக்கக்கூடியவை. இவை மூலம் 3ஜி வேகத்துடன் கூடிய இணையத்தளப் பயன்பாட்டை மக்கள் பெறமுடியும்.

தானியங்கி கார், கூகுள் கண்ணாடி போன்றவற்றைத் தயாரித்த கூகுள் நிறுவனத்தின் பிரத்தியேகக் குழுதான் இந்த பலூனையும் தயாரித்துள்ளது. இத் திட்டம் விஞ்ஞானக் கதை போலத் தெரியலாம், ஆயினும் பெரிய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய முடிவு இது என்கிறது கூகுள்.

# பாதுகாப்பான அக்கவுண்ட் செயற்பாடு...



மற்றவர்கள் பயன்படுத்தக் கூடிய தனிப்பட்ட கணனி அல்லது இன்ரநெற் மைய கணனி என எதன் மூலமாவது, இணைய இணைப்பினைப் பயன்படுத்துவதாக இருந்தால், உங்கள் பெயர் மற்றும் பாஸ்வேட்டுக்குப் பதிலாக, குறியீடுகளைப் பயன்படுத்தலாம். இதற்கு, நீங்கள் உங்கள் மொபைல் போன் எண்ணைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஹொட் மெயில் அல்லது அவுட்லுக் டொட கொம் தளங்களில், வழக்கம் போல, உங்கள் கணனி லொக் இன் செய்திடவும். வலது மேல் மூலையில் உள்ள, உங்கள் யூசர் பெயரில் கிளிக் செய்திடவும். இங்கு Account என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து 'Edit security info' என்ற லிங்க்கில் கிளிக் செய்திடவும். இங்கு கிடைக்கும் படிவத்தில், உங்கள் மொபைல் போன் எண் உட்பட, அனைத்து தகவல்களையும் பதிந்திடவும்.

இந்த பாதுகாப்பு நிலையை, அடுத்து வரும் நிகழ்வுகளிலும் பயன்படுத்த, ஹொட் மெயில் லொக் இன் திரையில், 'Get a single use code to sign in with' என்ற லிங்க்கில் கிளிக் செய்திடவும். இதனைத் தொடர்ந்து உங்கள் மொபைல் போனுக்கு லொக் இன் குறியீடு ஒன்று தரப்படும். இது ஒரு டெக்ஸ்ட் மெசேஜாக மொபைல் போனுக்கு வரும். இதனை நீங்கள் பயன்படுத்த வேண்டும். ஜிமெயில் இதே போன்ற ஒரு சிஸ்டத்தைப் பயன்படுத்துகிறது. உங்கள் தனிப்பட்ட கணனி, ஜிமெயில் ( http:// mail.google.com ) தளத்திற்குச் செல்லவும். பின் வழக்கம் போல உங்கள் அக்கவுண்ட் லொக் இன் செய்திடவும். உங்கள் ஈமெயில் முகவரியில் கிளிக் செய்து, கிடைக்கும் விண்டோவில் Account என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

இங்கு இடது பக்கம் காணப்படும் Security என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். இதில் '2step verification' என்ற தலைப்பில் கிடைக்கும் Edit என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். அடுத்து, நீல நிறத்தில் உள்ள Start Setup என்ற பட்டனில் கிளிக் செய்து, அடுத்தடுத்து கேட்பவற்றைத் தரவும். அடுத்து நீங்கள் வேறு ஒரு தனிப்பட்ட கணனியில் ஜிமெயில் தளத்தை அணுகுகையில், கூகுள் மெயில் தளம், உங்கள் மொபைல் போனுக்கு குறியீடு ஒன்றை அனுப்பும். இதனை உங்கள் பாஸ்வேர்டுடன் இணைத்துத்தர வேண்டும்.

# பதின்ம வயது சிறுமிகளுக்கு பாலியல் அச்சுறுத்தல்

# விழிப்புடன் இருக்க பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு மற்றும் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற இரண்டு வெவ்வேறான சம்பவங்களில் இரண்டு சிறுமிகள் பாலியல்வல்லுறவிற்குட்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய குறித்த நபர்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் வல்வெட்டித்துறையில் 12 வயதுச் சிறுமி ஒருவரைக் காதலித்து பாலியல்வல்லுறவுக்குட்படுத்திய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 27வயது இளைஞர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதனை அடுத்து அவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாகவும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் யாழ். பொலிஸாருக்கு கிடைத்த மற்றுமொரு முறைப்பாட்டில் நான்கு வயதுச்சிறுமி ஒருவரைப்பாலியல் துஷ்பிரயோகம் செய்த 68 வயது முதியவர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கடந்த 7ஆம் திகதி கொக்குவில் கிழக்குப்பகுதியில் உள்ள வீடொன்றிற்கு மாலை நேர வகுப்பிற்குச் செல்லும் நான்கு வயது மாணவி ஒருவர் சென்ற சமயம் அங்கு வகுப்பு நடைபெறவில்லை அதனை சாதகமாகப் பயன்படுத்திய குறித்த வீட்டுக்காரனான 68 வயதுடைய வயோதிபர் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார். இதனை அடுத்து இந்தச் சம்பவம் குறித்து அயலில் உள்ளவர்கள் சிறுவர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியதனை அடுத்து பொலிஸாருக்கு கடந்த 18ஆம் திகதி இது குறித்து முறைப்பாடு கிடைத்ததனை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டார்

அவரை எதிர்வரும் யூலை மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

குறித்த வயோதிபரின் இரண்டு பிள்ளைகளும் வெளிநாட்டில் உள்ள நிலையில் அவர் அவரது மனைவியுடன் குறித்த வீட்டில் வசித்து வந்திருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

எனவே, இவ்வாறு சிறுபிள்ளைகளை கல்வி கற்க அனுமதிக்கும் பெற்றோர் இவ்வாறான பாதிப்புக்கள் பிள்ளைகளுக்கு ஏற்படா வண்ணம் அவதானமாக செயற்படவேண்டும். என்றும் பொலிஸ்தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேள்ள கடந்த ஆறுமாதங்களில் பதினொரு சிறுவர்துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவித்த யாழ். சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் 16 வயதிற்கும் குறைவான வயதுடைய சிறுமிகளே இவ்வாறான சம்பவங்களில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(பா)

# மந்தகதியில் வீதிப்புனரமைப்பு; வர்த்தகர்களும், பயணிகளும் அவலம்



கிளிநொச்சி டிப்போச்சந்தியிலிருந்து கனகபுரம் ஊடாக அக்கராயன் செல்லும் வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

டிப்போச் சந்தியிலிருந்து இந்த வீதிப்புனரமைப்புப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மந்த கதியில் வேலைகள் இடம் பெறுகின்றன ஐநூறு வரையான தங்கு விடுதிகள்,பாரிய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மொத்த வியாபார நிலையங்கள் உட்பட சிறுவர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், உட்பட சிறியரக கடைகள் அமைந்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு மேலாக மிகக்குறுகலானதும் உயரமானதுமான இப்பாதைப் புனரமைப்பு இடம்பெறுவதால் இப்பகுதி பெரும் தூசு மண்டலமாக காட்சியளிக்கின்றது்.

மோட்டார் சைக் கிள் மற்றும் சைக்கிள்களில் செல்லும் பயணிகளும் தூசிப்படலத்தால கண்களை மூடவேண்டிய நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் வர்த்தக நிலையங்களும் விற்பனைப் பொருட்கள் தூசுபிடித்து சேதமடைந்து நட்டமடைகின்றன.

இவ் வீதிப் புனரமைப்பை துரிதகதியில் நடைபெறச்செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பாதிக்கப்படுவோர் கோருகின்றனர்.(21)

# க.பொ.த (உ/த) பரீட்சைக்கான வழிகாட்டல் உதவிக் கருத்தரங்கு

கல்வி அமைச்சின் ஆலோசனைக்கமைய யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினர் வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்குகளினை ஒழுங்கு செய்துள்ளனர்.

மேற்படி கருத்தரங்குகள் 24.06.2013 திங்கள் கிழமை காலை 8.30முதல் பி.ப. 4.30 வரை பொருளியல் பாடத்திற்கும்,25.06.2013 செவ்வாய் கிழமை கணக்கீடு பாடத்திற்கும் 26.06.2013 புதன்கிழமை வணிகக்கல்வி பாடத்திற்கும் நடைபெறவுள்ளது.

மேற்படி கால அட்டவணையில் நடைபெறும் கருத்தரங்குகள் அத்தியார் இந்துக்கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அத்தியார் இந்துக் கல்லூரியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, சென்திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி மற்றும் அத்தியார் இந்துக் கல்லூரி என்பன இணைக்கப்பட்டுள்ளன.

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் சென்.ஜோண்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கொழும்புத்துறை ம.வித்தியாலயம், சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி என்பன இணைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மற்றும் யாழ். மத்திய கல்லூரி என்பன இணைக்கப்பட்டுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்து மகளிர் கல்லூரி, கனகரெத்தினம் ம.ம.வித்தியாலயம், முத்துத்தம்பி ம.வித்தியாலயம், கோண்டாவில் இ.ம.வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வித். செங்குந்தா இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் இணைகப்பட்டுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரியில் வைத்தீஸ்வராக் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம், சன்மார்க்க மகாவித்தியாலயம், மற்றும் யாழ். இந்துக் கல்லூரியும் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட தினங்களில் தரம் 13இல் கற்பிக்கும் அவ்வவ் பாட ஆசிரியர்களை உரிய நிலையங்களில் மாணவர்களுடன் சமூகமளிக்குமாறு யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கேட்டுக்கொண்டுள்ளார். (42)

# பதிவிறக்கப் பெட்டகம்

## எழுத்தாளர் பேயோனின் ட்விட்டர் பக்கத்திலிருந்து:

இந்த பிளாஸ்டிக் ஸ்டூல் மீது ஒரு ஈ அமர்ந்து என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறது. எழுதும்போது வண்ணத்துப்பூச்சி என்றுதான் எழுத வேண்டியிருக்கும்.

***

பெண்களைக் கவர ஆசை என்றாலும் அதற்காக சம கால தமிழ் கவிதை எழுதும் நிலைக்கு ஆளாவதை நான் விரும்பவில்லை. இதற்கு நிச்சயம் ஆக்கபூர்வமான தீர்வு இருக்கும்.

***

இயக்குநர் பியரி பலர்டியு இறந்துவிட்டார். பாவம் யார் பெற்ற பிள்ளையோ. அவரைப் பற்றி அறிந்த பின் 2002லேயே அவர் படங்களை பார்த்ததுபோல் எழுத வேண்டும்.

***

வில்லனாக நடிப்பீர்களா என ஒரு இயக்குநர் கேட்டார். நடிக்க வராது என்றேன். மார்க்வெஸ் பற்றி பேசுங்கள், நாங்கள் டப்பிங் செய்துகொள்கிறோம் என்றார்.

***

எனக்கு ஜெயமோகன் அளவுக்கு வரலாறு தெரியாதோ என் கிற சந்தேகம் நேற்று தூங்கும் நேரம் வாட்ட துவங்கியது...

***

விகடன் என் பத்தியை திரும்ப அனுப்பிவிட்டது. தகவல் பிழை ஒன்றுகூட இல்லையாம். எப்படி நடந்தது இந்த தவறு?

***

என் மகன் எனக்கு சரியான இலக்கிய வாரிசாக வருவான் என தோன்றுகிறது. 'அர்த்தம்னா என்னப்பா அர்த் தம்?' என்று கேட்கிறான்.

***

நெருங்கிய நண்பரிடம் கடன் கேட்கும்போது அதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டியிருப்பது சமயத்தில்எவ்வளவு பெரிய அசௌகரியம்.

***

நான் குடை எடுத்து வரவில்லையாம்
என்னமாய்ப் பெய்கிறது மழை!

***

நானும் உங்களைப் போன்று டீசன்ட்டானவன்தான். நானும் தான் கோல்ட்ஃப்ளேக் கிங்ஸ் பிடிக்கிறேன். நானும் தான் உங்களைப்போல 'லாஜிக் இடிக்கிறது' என்பதற்கு பதில் 'தர்க்க இடிபாடுகளிடையே சிக்கியுள்ளது' என்று சொல்ல விரும்புகிறேன். நானும் கஷ்டப்பட்டும் முன்னுக்கு வர முடியாதவன் தான்.

***

சென்ற வாரம் இதே நேரத்தில் உங்கள் முந்தைய கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது அதில் நீங்கள் கேட்டிருந்த ஆழமான கேள்விகளைப் பலர் கேட்கக் கேட்டிருக்கிறேன். இம்மாதிரியான கேள்விகள்தாம் நமக்கென ஒரு தனித்துவ அடையாளத்தைத் தருபவை. கேள்விகள் கேட்பதை மட்டும் நாம் நிறுத்திவிடக் கூடாது. உதாரணமாக, சமகால வாழ்வியலில் மனிதன் கால்களை எதற்காகப் பயன்படுத்துகிறான்?

***

ஒரு டால்ஸ்டாய் நாவல் படித்துக்கொண்டிருக்கையில் பக்க அடையாளமாக வைத்த 100 ரூபாய் நோட்டு காணாமல் போனதால் 10 நிமிடம் தூக்கத்தை இழந்த அனுபவம் உண்டு எனக்கு.

***

உண்மையான எழுத்தாளர்களால் பெரிய பண மோசடிகளைச் சாதித்துவிட முடியாது.

***

உலகம் சுருங்கச் சுருங்க மனிதர்களிடையிலான இடைவெளி அதிகரித்துக்கொண்டிருந்தால் கடைசியில் மனிதர்கள் உலகிற்கு வெளியே சென்றுவிடும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

***

குற்றவுணர்வைவிடக் கொடிய நரகம் ஒன்று உண்டென்றால் அது இன்னும் அதிக குற்றவுணர்வுதான். எப்படி நான் மட்டும் இவ்வளவு நல்லவனாக இருக்கிறேன்?

***

கர்நாடக இசையைப் பொதுவாக நான் அதன் கடினத்தன்மை காரணமாக மற்றவர்களே கேட்டுக்கொள்ளட்டும் என்று தவிர்த்துவிடுவது. ஆலாபனை கேட்கும்போது எனக்கு ரத்த அழுத்தம் எகிறும். சினிமாவில் வரும் கர்நாடகம் எனக்குப் போதும் என்று வாழ்ந்துவிட்டேன்.

***

உணர்ச்சியைக் கழற்றிவைத்துவிட்டு உன்னதங்களை சிருஷ்டிப்பது கலையின் இயல்புகளில் ஒன்று அல்லவா?

***

இன்று எதைத் தெரிந்தாற்போல காட்டிக்கொள்வது? – யோசிக்கிறேன்...

# பொது மக்களின் குறைகேள் சந்திப்பு

# வாழ்வாதாரத்தை விருத்தி செய்பவாய்ப்பு



(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினை கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். நெடுந்தீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மக்களது அடிப்படைத் தேவைகளான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் அதேவேளை அவற்றுக்கான தீர்வுகளை முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம். குடிநீர்த் தட்டுப்பாட்டை சீர் செய்யும் வகையில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கிய அமைச்சர் அவர்கள் அதற்கான செயற்திட்டங்களையும் தெளிவுபடுத்தினார். இதனிடையே மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அதேபோன்று கடல் மற்றும் தரைமார்க்கமான போக்குவரத்துக்களை சீர்செய்யும் முகமாக முன்னெடுக்கவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது எடுத்து விளக்கினார்.

அத்துடன், நெடுந்தீவின் வளங்களைப் பாதுகாக்கும் வகையிலும், உல்லாசப்பயணிகளைக் கவரும் வகையிலும் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார். இதனிடையே நெடுந்தீவு பிரதேசசபைக்கு ஒரு தொகுதி நூல்களையும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் ஒருதொகுதியினருக்கு துவிச்சக்கரவண்டிகளையும் அமைச்சர் வழங்கி வைத்தார். இதன் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின்(உதயன்), யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்), உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# களுகங்கையை கடப்போருக்கு பாதுகாப்புக் கவசங்கள்

(கொழும்பு)

களு கங்கையூடாகச் செல்லும் இரத்தினபுரி கிராம வாசிகளின் பாதுகாப்பு நலன் கருதி பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்பட்டன. இப்பகுதி மக்களின் குறிப்பாக பாடசாலை செல்லும் சிறார்களின் நலன் கருதி ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கொன்று சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கின் போது முதலமைச்சர் மஹிபால ஹேரத் மேற்படி பாதுகாப்புக் கவசங்களை மாணவர்களிடம் கையளித்தார்.

களுகங்கையை கடந்து படகுகள் மூலம் செல்லும் இரத்தினபுரி கிராம வாசிகளினதும் பாடசாலை சிறார்களினதும் பாதுகாப்பு நலன் கருதி பாதுகாப்புக் கவசங்களை வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த பணிப்புரைக்கு அமையவே இவை வழங்கப்படுவதாக முதலமைச்சர் மஹிபால ஹேரத் இங்கு குறிப்பிட்டார். இந்த மக்களுக்காக களு கங்கையூடாக இரத்தினபுரிக்கு செல்வதற்கு பாலம் ஒன்றை அமைக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# நஞ்சூட்டி கொலைசெய்ய முயற்சி மயக்கமுற்ற மாணவிக்கு தீவிர சிகிச்சை

(மட்டக்களப்பு)

விஷமூட்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவியின் உடல் நிலை தேறிவருவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவு, வேப்பவட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்களினால் வழிமறிக்கப்பட்டு விஷமூட்டப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர், கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த மாணவி தன்னாமுனையிலுள்ள பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தலைக்கவசம் அணிந்து வந்த இருவர் இவ்வாறு தனது மகளை வழிமறித்து விஷத்தை ஊட்டியுள்ளதாக மாணவியின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மயங்கிய நிலையில் வீதியருகே வீழ்ந்துகிடந்த தனது மகளை வீதியால் சென்ற லொறிச் சாரதி கண்டு முச்சக்கர வண்டியொன்றில் ஏற்றிச்சென்று உறவினர்களிடம் ஒப்படைத்ததாகவும் பின்னர் உறவினர்கள் தனது மகளை உடனடியாக கரடியனாறு வைத்தியசாலையில் சேர்ப்பித்ததாகவும் மாணவியின் தாய் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு வைத்தியசாலைப் பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# உப்போடையில் நட்சத்திர விடுதி



மட்டக்களப்பு சின்ன உப்போடையில் 35 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "ஈஸ்ட் லகூன்" எனும் நட்சத்திர ஹோட்டல் நேற்று சனிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஹோட்டல் உரிமையாளரும் மட்டக்களப்பு வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவரும் பெற்றி இன் பிறைவட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளருமான எம்.செல்வராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட், ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், ஜனாதிபதியின் ஆலோசகரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான அமைப்பாளருமான அருண் தம்பிமுத்து, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். தேசிய முதலீட்டுச்சபை மற்றும் சுற்றுலா சபை என்பவற்றின் அனுமதியுடன் சகல வசதிகளுடையதாக இந்த நட்சத்திர ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நான்கு மாடிகளைக் கொண்ட இந்த ஹோட்டலில் 45 அறைகள் உள்ளன. நீச்சல் தடாகம், திருமண மண்டபம் என்பவற்றுடன் புதிய தொழிநுட்பங்களுடனான உள்ளக கூட்டமண்டபம் என்பவைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

# உயிர்குடிக்கும் டெங்கு இந்த ஆண்டு மட்டும் 42பேர் பலி

இந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் இதுவரை 42 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 14 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதேவேளை கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் தடுக்கப்படாவிட்டால் டெங்குக் காய்ச்சல் துரிதமாக பரவும் அபாயம் நிலவுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் கூறியுள்ளார்.

இந்த நிலையில் கொழும்பு மாநகரிலுள்ள 20 ஆயிரத்து 500 வீடுகளையும் மேலும் பல நிறுவனங்களையும் அதிகாரிகள் சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.இதன்போது டெங்கு நுளம்பு பெரு கும் வகையில் சூழலை வைத்திருந்த 500 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் டொக்டர் பிரதீப் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த 14 அரச நிறுவனங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பொரளை, வனாத்தமுல்ல, தெமட்டகொடை ஆகிய பிரதேசங்களிலேயே தற்போது அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கிரிக்கெட் வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தவறியதா பிரித்தானியா?

இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையில் இங்கிலாந்தின் கார்டிப் மைதானத்தில் இடம்பெற்ற வெற்றியாளர் கிண்ண அறையிறுதிப் போட்டியின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் மைதானத்தினுள் பிரவேசித்து குழப்பம் ஏற்படுத்தினர். இது குறித்து பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகம், பிரித்தானியா அரசாங்கத்திடம் இருந்து அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரின் ஊடாக இந்த அறிக்கை கோரப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் மூலம், இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான பாதுகாப்பினை உரிய வகையில் வழங்கவில்லை என்று உறுதியாகி இருப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஆதர் சீ கிளார்க்கின் மரபணு மாதிரிகள் விண்ணுக்கு

## மரபணு ஆராய்ச்சியின் புதுமுயற்சி



பிரபல விஞ்ஞான புனைகதை எழுத்தாளர் ஆதர் சீ கிளார்க்கின் (Arthur Charles Clarke) மரபணுக்களை விண்ணில் ஏவ நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சூரியனைச் சுற்றி செல்லும் விண்கலம் ஒன்றில் இந்த மரபணுக்கள் வைக்கப்பட உள்ளன. 2014ஆம் ஆண்டு இந்த விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட உள்ளது.

சூரிய சக்தியில் இந்த விண்கலம் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மனித மரபணு பற்றிய டிஜிட்டல் தகவல்களைக் கொண்ட முதல் விண் கலமாக இந்த விண்கலம் கருதப்படுகின்றது.

மனிதர்களின் மரபணுத் தகவல்கள், இசை, குரல் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை இந்த விண்கலம் தாங்கிச் செல்லவுள்ளது.

எதிர்கால சந்தத்தியினருக்கு பயனளிக்கக் கூடிய வகையில் இந்த தகவல்கள் திரட்டப்பட்டு விண்ணில் ஏவப்படுவதாக நாசா ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பிரித்தானியாவில் 1917ஆம் ஆண்டில் பிறந்த எழுத்தாளர் ஆதர் சீ கிளார்க், 1956ஆம் ஆண்டு இலங்கையில் குடியேறி அங்கிருந்து தனது எழுத்துக்களையும் ஆய்வுகளையும் தொடர்ந்தார்.

45 ஆண்டுகாலம் இலங்கையில் வாழ்ந்த அவர் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார்.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

இரசாயனவியல்

1) $Ca(NH_3)_2$ இன் ஒரு நீர்க்கரைசல் 0.500 $dm^3$ இல் $Ca^{2-}$ அயன்களின் 20.0 mg அடங்கியுள்ளது. கரைசலில் (moldm$^{-3}$ இல்) $NO^{3-}$ இன் செறிவு யாது? (Ca = 40)

1) $5.0 \times 10^{-4}$ 2) $1.0 \times 10^{-3}$ 3) $2.0 \times 10^{-3}$
4) $4.0 \times 10^{-3}$ 5) $1.0 \times 10^{-2}$

2) சோடியம் காபனேற்றினதும் சோடியம் ஐதரசன் காபனேற்றினதும் ஒரு 4.0 g கலவை வெப்பமாக்கப்பட்டபோது திணிவில் உள்ள இழப்பு 0.3 g ஆக இருந்தது. கலவையில் சோடியம் காபனேற்றின் திணிவின் சதவீதம்
(H=1, C =12, O=16, Na =23)

1) 95 2) 90 3) 83
4) 79 5) 63

3) $NaNO_3$ உடன் மாசடைந்த $Pb(NO_3)_2$ இன் 0.331g மாதிரி ஒன்று 100.00 $cm^3$ நீரில் கரைக்கப்பட்டது. பின்னர் வீழ்படிவாக்கம் பூரணமடையும்வரை இக்கரைசலினூடாக மிகையான $H_2S$ வாயு குமிழியிடச் செய்யப்பட்டது. உலர்த்திய வீழ்படிவின் திணிவு 0.200g ஆக இருந்தது. இம்மாதிரியின் சதவீதத்தூய்மை (w/w) அண்ணளவாக, (N-14, O-16, S -32, Pb -207)

1) 16 2) 47 3) 68
4) 79 5) 84

4) 600 $cm^3$ ஒட்சிசனில் ஓர் ஐதரோக்காபனின் 100$cm^3$ ஐ முற்றாக எரித்தபோது 300 $cm^3$ காபனீரொட்சைட்டும் 400 $cm^3$ நீராவியும் உண்டாகின. தகனத்திற்குப் பின்னர் தாக்கம் புரியாமல் இருந்த ஒட்சிசன் 100$cm^3$ ஆகும். எல்லாக் கனவளவுகளும் ஒரே வெப்பநிலையிலும் ஒரே அமுக்கத்திலும் அளக்கப்பட்டன எனின், ஐதரோக்காபனின் சூத்திரம்

1) $C_2H_4$ 2) $C_2H_4$ 3) $C_3H_6$
4) $C_3H_8$ 5) $C_4H_8$

5) ஒரு கனமானத்திற்குரிய குடுவையில் 142 mg $Na_2SO_4$ ஐ நீரில் கரைத்துப் பின் அது 500 $cm^3$ இற்கு ஐதாக்கப்பட்டு $Na_2SO_4$ இனது நீர்க்கரைசலொன்று தயாரிக்கப்பட்டது. இக்கரைசலில் உள்ள $Na^+$ அயன்கள் mgdm$^{-3}$ அலகில் (O-16, Na-23, S-32)

1) $2.00 \times 10^{-3}$ 2) $4.00 \times 10^{-3}$ 3) 46
4) 92 5) 184

6) நீர்க்கரைசலொன்று திணிவு ரீதியில் 20% $Na_2S_2O_3 .5H_2O$ ஐக் கொண்டுள்ளது. அறை வெப்பநிலையில் இக்கரைசலின் அடர்த்தி 1.24 gm$^{-3}$ ஆகும். இக்கரைசலில் $Na_2S_2O_3$ இன் மூலர்திறன் (H-1.0 O = 16 Na - 23, S =32)

1) 1.0 2) $1.0 \times 10^{-3}$ 3) 0.050
4) 1.6 5) 0.10

7) X, Y ஆகியவற்றினது சார்மூலக்கூற்றுத்திணிவுகள் 2 : 3 எனும் விகிதத்தில் இருக்கின்றன. X, Y ஆகியவற்றினது கலவை ஒன்றில் X இனது மூல்ப்பின்னம் 1/3 ஆகும்.இக்கலவையிலுள்ள X இனது திணிவு சதவீதம்

1) 10% 2) 25% 3) 33.3%
4) 50% 5) 75%

8) $MSO_4$ x $H_2O$ ஆனது திணிவு ரீதியான 36% $H_2O$ ஐக் கொண்டுள்ளது. X இன் பெறுமானம் (H=1.0, O=16, S=32, M=64)

1) 3 2) 4 3) 5
4) 6 5) 7

9) பின்வருவனவற்றில் எதற்கு ஐ- அயன்களின் ஒரு மூலை ஒட்சியேற்றுவதற்கு அதிகூடிய மூல்களின் எண்ணிக்கை தேவைப்படுகின்றது.

1) $Cl_2$ 2) $K_2CrO_4$ 3) $K_2Cr_2O_7$
4) $FeCl_3$ 5) $KMnO_4$

10) அனிலின் ($C_6H_5NH_2$) இன் 1.86 g உடன் தாக்கம் புரிவதற்குத் தேவையான 0.20 moldm$^{-3}$ HCl இன் கனவளவு (H=1, C=12, N=1)

1) 150 $cm^3$ 2) 10$cm^3$ 3) 75$cm^3$
4) 200 $cm^3$ 5) 100 $cm^3$

11) $H_2(g)$ இன் முன்னிலையில் $TiO_2$ சூடாக்கப்படும்போது தைத்தேனியத்தின் இன்னொரு ஒட்சைட்டு உருவாகின்றது. $TiO_2$ இன் 1.600 g அனது இவ் ஒட்சைட்டின் 1.440 g ஐ உண்டாக்குமானால் இந்த ஒட்சைட்டினது சூத்திரம் (O-16, Ti-48)

1) TiO 2) $Ti_2O_2$ 3) $Ti_2O$
4) $Ti_3O_4$ 5) $Ti_2O_2$

12) ஒரு உலோகம் M ஆனது அதனுடைய சல்பேற்று $M_2(SO_4)_3$ மாற்றப்பட்டது. இச் சல்பேற்றின் கரைசலொன்று $Pb(NO_3)_2$ உடன் தொழிற்படவிடப்பட்டு $PbSO_4$ பெறப்பட்டது. M இன் 1.04 g ஆனது $PbSO_4$ இன் 9.09 g உலர் திணிவைக் கொடுத்திருப்பின் உலோகம் M ஆனது

(A) 2 Cr - 52, Fe -55.8, Ca -58.9, Ga - 69.7, $PbSO_4$ - 303)

1) Al 2) Cr 3) Fe
4) Co 5) Ga

13) யூரியா ($H_2NCONH_2$) இன் கரைசலொன்று வெப்பமாக்கலின்போது பின்வருமாறு பிரிகையடைகின்றது $H_2NCONH_2 + 3\,H_2O \rightarrow CO_2 + 2\,NH_4OH$ 0.20 mol dm$^{-3}$ $Al(NO_3)_3$ கரைசலின் 100.00 $cm^3$ இலுள்ள Al ஐ வீழ்படிவாக்கு வதற்குத் தேவைப்படும் யூரியாவின் திணிவு

1) 1.80 g 2) 0.90 g 3) 2.70 g
4) 3.60 g 5) 1.20 g

14) $NaCl$,d; m, g, MgCl இன் $m_2$ g ஆகியன நீரில் கரைக்கப்பட்டு பின்பு 1.00 $dm^3$ இற்கு ஐதாக்கப்பட்டது. இக் கரைசலின் 25.00 $cm^3$ மிகையான $AgNO^3$ கரைசலுடன் தொழிற்படவிடப்பட்டது. பெறப்பட்ட Agcl வீழ்படிவின் திணிவு $m^+$ g ஆகும்.
(சார்மூலர்த்திணிவு NaCl = Ml, $MgCl_2$ , = $M_2$, Agcl = $M_3$) பின்வரும் கோவைகளில் எது சரியானது.

1) $m_3 = \frac{m_1}{M_1} + \frac{2m_2}{M_2} \times M_3$ 2) $m_3 = \left[\frac{m_1}{M_1} + \frac{m_2}{M_2}\right] \times M_3$

3) $m_3 = \frac{25}{1000} \times \left[\frac{m_1}{M_1} + \frac{m_2}{M_2}\right] \times M_3$ 4) $m_3 = \frac{1}{1000} \times \left[\frac{m_1}{M_1} + \frac{m_2}{M_2}\right] \times M_3$

5) $m_3 = \frac{25}{1000} \times \left[\frac{m_1}{M_1} + \frac{2m_2}{M_2}\right] \times M_3$

15) 48 ppm Mo ஐக் கொண்டுள்ள $(NH_4)_2MoO_4$ கரைசலொன்றினது மூலச் செறிவு யாது?

[1 ppm = 1 mg dm$^{-3}$, Mo = 96]

1. $2.5 \times 10^{-5}$ mol dm$^{-3}$ 2) $7.5 \times 10^{-5}$ mol dm$^{-3}$ 3) $5.0 \times 10^{-3}$ moldm$^{-3}$
4. $2.5 \times 10^{-4}$ mol dm$^{-3}$ 5) $5.0 \times 10^{-4}$ mol dm$^{-3}$

16) 0.1 mol dm$^{-3}$ $H_2SO_4$ கரைசலொன்று காய்ச்சிவடித்த நீரினால் இரு மடங்காக ஐதாக்கப்படுகின்றபோது அதனுடன் சம்பந்தப்படும் பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையானதன்று.

1) $(H_3O^+)$ குறைகின்றது 2) $(SO_4^{2-})$ குறைகின்றது
3) $(HSO_4(aq)$ குறைகின்றது 4) (OH-(aq) குறைகின்றது.
5) கரைசலினுடைய அடர்த்தி குறைகின்றது.

17) $BaCl_2\,2\,H_2O$ (சார் மூ.கூ.தி =244) இனதும் KCl இனதும் கலவையொன்றின் 0.744 மாதிரியொன்று திணிவு மாறாதிருக்கும் வரை 1500 C யில் சூடாக்கப்பட்டது. விளைவினது திணிவு 0.708 g ஆகும் மாதிரியிலுள்ள முஊட இன் திணிவு (H-1, O-16, K -19, Cl 35.5)

1) 0.500 g 2) 0.425 g 3) 0.300 g
4) 0.250 g 5) 0.150 g

18) 1 mol சேதனச் சேர்வை x இன் முழுமையான தகனத்திற்கு $O_2(g)$ இன் 2 mol தேவைப்படுவதுடன் x ஆனது அத்தகனத்தின்போது 2 mol $CO_2$ ஐயும் 2 mol $H_2O$ ஐயும் மாத்திரம் விளைவுகளாக உண்டாக்குகின்றது x இன் மூலக்கூற்றுச் சூத்திரம்

1) $C_2H_4$ 2) $C_2H_6$ 3) $C_2H_4O$
4) $CH_4O$ 5) $C_2H_4O_2$

19) 40g திணிவுடைய இரும்புத்தகடு ஒன்று $CuSO_4$ கரைசலொன்றின் 250 $cm^3$ இற்குள் அமிழ்த்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நேரத்தின் பின்பு தகட்டினுடைய திணிவு 42 g ஆகக் காணப்பட்டது. படிந்த Cu இன் திணிவு (Fe - 56, Cu - 64)

1) 42 g 2) 16 g 3) 14 g
4) 8 g 5) 2 g

20) $MgSO_4$ இன் நீர்க்கரைசலொன்று 0.001 moldm$^{-3}$ செறிவைக் கொண்டுள்ளது. இக் கரைசல் சம்பந்தமாக, பின்வரும் கூற்றுக்களில் எது? எவை சரியானது? சரியானவை.

a) இக் கரைசலிலுள்ள $MgSO_4$ இன் செறிவு 24.0 ppm ஆகும்
b) இக் கரைசலிலுள்ள $SO_4^{2-}$ இன் செறிவு 96.0 ppm ஆகும்.
c) இக் கரைசலிலுள்ள $MgSO_4$ இன் செறிவு 120.0 ppm ஆகும்
d) இக் சரைசலிலுள்ள $Mg^{2+}$ இன் செறிவு 2.4 ppm ஆகும்.

21) கலவையொன்று $Fe_2O_3$ ஐயும் $Fe_3O_4$ ஐயும் கொண்டுள்ளது. இக்கலவையின் 5.52g மாதிரியொன்று ஐதான $H_2SO$ இல் கரைக்கப்பட்டுப் பெறப்பட்ட கரைசலினது முழுத் தாக்கத்திற்கு 0.10 mol dm$^{-3}$ $KMnO^4$ இன்

1) 2 : 1 2) 1 : 2 3) 1 : 1 4) 2 : 3 5) 4 :1


22) 10.4 ppm $Cr^{3+}$ கரைசலின் 1.00 $dm^3$ ஐத் தயாரிப்பதற்குத் தேவையான $K_2SO_4$, $Cr_2(SO_4)_3$ $24H_2O$ (சார் மூ.கூ.திணிவு = 894) இன் திணிவு ஆனது (1 ppm = 1 mg $dm^{-3}$, Cr - 52)

1) 8.940 mg 2) 8.940 g 3) 17.88 mg
4) 178.8 mg 5) 89.40 mg

23) தொன்னம் வினாகிரி (அடர்த்தி 1.07 g $cm^{-3}$) இனது 10.0 $cm^3$ மாதிரியொன்று பொருத்தமான காட்டியொன்றை உபயோகித்து 0.428 mol $dm^{-3}$ NaOH கரைசலுடன் நியமிக்கப்பட்டது. முடிவுப்புள்ளி 25.00 $cm^3$ எனில் வினாகிரியிலுள்ள அசற்றிக் அமிலத்தின் திணிவு சதவீதம் w/w % யாது? { $CH_3COOH$ இன் சார் மூ.கூ.திணிவு - 60}

1) 0.060 2) 0.60 3) 3.0
4) 6.0 5) 12.0

24) 0.1 mol $dm^{-3}$ $H_2SO_4$ கரைசலின் 50.0 $cm_3$ I 0.1 mol $dm^{-3}$ $Ba(OH)_2$ கரைசலின் 25.0 $cm^3$ இற்குள் படிப்படியாகச் சேர்க்கும்பொழுது அக்கலவையிலுள்ள அயன்களின் மொத்த எண்ணிக்கையின் மாறலைச் சரியாகக் காட்டுவது



சேர்க்கப்பட்ட $H_2SO_4$ இன் கனவளவு /$cm^3$

25) NaOH ஆனது யூரியாவுடன் பின்வருமாறு தாக்கம் புரிகின்றது

$$2\ NaOH + H_2NCONH_2 \rightarrow NA_2\ CO_3 + 2\ NH_3 \uparrow$$

1.0 mol $dm^{-3}$ NaOH இன் 25.0 $cm^3$ உடன் யூரியா (யூரியாவின் சார் மூ.கூ. திணிவு - 60) இன் 0.6 g முற்றாகத் தாக்கம் புரியவிடப்படுகின்றது. கொதிக்கவைத்தல் மூலம் $NH_3$ முழுவதும் அகற்றப்படுகின்றது. பெறப்பட்ட கரைசலை நடுநிலையாக்குவதற்குத் தேவையான 0.5 mol $dm^{-3}$ HCl இன் கனவளவு

1) 10.0 $cm^3$ 2) 12.5 $cm^3$ 3) 20.$cm^3$
4) 25.0 $cm^3$ 5) 50.0 $cm^3$

26) 0.2 mol $dm^{-3}$ $H_2SO_4$ இன் 1.o $cm^{-3}$ உம் 0.2 mol $dm^{-3}$ HCl இன் 1.0 $dm^3$ உம் 2.0 $dm^3$ கரைசலைப் பெறக்கூடியதாக ஒன்றுடனொன்று கலக்கப்பட்டன. இந்நிபந்தனைகளின் கீழ் $H_2SO_4$ முழுமையாகக் கூட்டற் பிரிவுற்றிருந்தால், பெறப்பட்ட கரைசலில் உள்ள $H^+$ அயனின் செறிவு

1) 0.1 $moldm^{-3}$ 2) 0.15 $moldm^{-3}$
3) 0. 2 $moldm^{-3}$ 4) 0.3 $moldm^{-3}$
5) 0.4 $moldm^{-3}$

27) o.1 $moldm^{-3}$ HCl (aq) இன் 70.o $cm^3$ ஆனது X $moldm^{-3}$ நீர் NaOH கரைசல் ஒன்றில் 30.0 $cm^3$ உடன் கலக்கப்பட்டது. இவ்வாறு கிடைக்கும் கரைசலில் $H^+$ (aq) இன் செறிவு 0.01 $moldm^{-3}$ எனின் X இன் பெறுமானம் $moldm^{-3}$ இல் யாது?

1) 0.3 2) 0.2 3) 0.02
4) 0.5 5) 0.05

28) 1.10 g $cm^{-3}$ அடர்த்தியில் 20% $HNO^3$ திணிவு ரீதியில் 10 g $HNO^3$ ஐக் கொண்டிருக்கும் ஐதான $NHO^3$ கரைசல் என்ன கனவளவை ($cm^3$) இல் உடையது.

1) 6 2) 15 3) 23
4) 45 5) 55

29) சோடியம் காபனேற்று பளிங்கு $Na_2\ CO_3\ 10H_2O$ என்ற சூத்திரத்தை உடையது. 4.0 $mold^{-3}$ கரைசலின் 2.5 $dm^3$ ஐத் தயாரிக்க நீரற்ற $Na_2CO_3$ யின் என்ன திணிவு தேவைப்படும்.

1) 106 g 2) 286 g 3) 530 g
4) 1060 g 5) 2860g

30) 0.6 mol Zinc nitrate (V) உம் o.6 mol Iron (III) Sulphate (VI) உம் நீரில் மொத்தக் கனவளவு 2.0 $dm^3$ தரக்கூடியதாகக் கரைக்கப்பட்டது. பின்வருவனவற்றுள் எது 0.3 $moldm^{-3}$ செறிவைக் கொண்டிருக்கும்.

1) Sulphate (VI) அயன்கள் 2) எதிரேற்றமுடைய அயன்கள்
3) நேரேற்றமுடைய அயன்கள் 4) Zinc அயன்கள்
5) nitrate (V) அயன்கள்

31) ஒரு வலுவளவுள்ள 5.0 g உலோகத்தின் நீரற்ற குளோரைட்டு அதன் நீரற்ற சல்பேற்றாக முற்றாக மாற்றப்பட்டபோது 6.0 g நீரற்ற சல்பேற்றைக் கொடுத்தது. {H - 1, Cl-35.5, S - 32, O -16} - உலோகத்தின் சாரணுத் திணிவானது

1) 20 2) 40 3) 27
4) 35 5) 43

32) $25^0$ C யில் நீரில் $KNO_3$ யில் கரைதிறன், கிலோகிராம் நீருக்கு 300g ஆகும். 600g நீரில் 540 g $KNO_3$ அடங்கிய சூடான கரைசலொன்று குளிராக்கப்பட்டால் $25^0C$ யில் கரைசலிலிருந்து பளிங்காகவல்ல $KNO_3$ இன் 252 திணிவு ஆனது?

1) 40g 2) 180g 3) 240g
4) 360 g 5) 540 g

33) 0.2 $moldm^{-3}$ NaOH(aq) இன் 125 $cm^3$ உம் 0.1 mol $dm^{-3}$ $H_2SO_4$ (aq) இன் 125 $cm^3$ உம் கலப்பதனால் உண்டாகிய கரைசலொன்றின் பிரசன்னமாக இருக்கும் அயன்களின் மூலகளின் எண்ணிக்கை ஆனது.

1) 0.0375 2) 0.0625 3) 0.0875
4) 0.15 5) 0.30

34) $H_2O_2$ உடன் அமிலமாக்கப்பட்ட $MnO^{4-}$ தாக்கம் புரிந்து $O_2Mn^{2+}$, $H_2$ O ஆகியவற்றை மாத்திரம் உண்டாக்குகின்றது. அமில ஊடகத்தில் ஒரு மூல் $H_2O_2$ உடன் முற்றாகத் தாக்கமடைவதற்குத் தேவையான $MnO_4$. இன் மூல்களின் எண்ணிக்கை ஆனது,

1) 0.4 2) 0.8 3) 2.0
4) 2.5 5) 5.0

35) 5.0 $moldm^{-3}$ செறிவுடைய யூரியாக் கரைசலின் அடர்த்தி 1.2 $kgdm^{-3}$ ஆகும். இக் கரைசலில் யூரியாவின் மூல்ப்பின்னம் யாதாகும் (யூரியாவின் மூ.கூ.தி - 60)

1) 9/10 2) 1/10 3) 1/11
4) 10/11 5) 11/12

36) $(NH_4)_2SO_4Fe_2(SO_4)_3\ 2_4H_2O$ திண்மம் 2500 cm3 நீர்க்கரைசலாக்கப்பட்டுள்ளது. இதன் 250 $cm_3$ நீர்க்கரைசலுக்கு மிகை $BaCl$ கரைசல் சேர்க்கப்பட்டு பெறப்பட்ட $BaSO$ வீழ்படிவு வடித்து உலத்தி நிறுக்கப்பட்டது. அதன் திணிவு 1.864 g ஆகக் காணப்பட்டது. தயாரிக்கப்பட்ட ஆரம்பக் கரைசலின் $Fe^+$ அயன் செறிவு mol $dm^{-3}$ இல் யாதாகும். {$BaSO_4$ சார் மூ.கூ.திணிவு = 233}

1) 0.02 2) 0.04 3) 0.08
4) 0.016 5) 0.24

37) $FeI_2$ ஆனது $KMnO_4$ இனால் அமில ஊடகத்தில் ஒட்சியேற்றப்பட்டால் இத் தாக்கத்தின் $FeI_2$ : $KMnO_4$ மூல் விகிதம் யாது?

1) 2: 3 2) 5 : 1 3) 5 : 2
4) 5: 3 5) 3 :2

38) ஒரு இரும்பின் ஒட்சைட்டு மாதிரி ஒன்றில் 72.4 % இரும்பும், 27.6 % ஒட்சிசனும் உண்டு. எனின் அவ்வொட்சைட்டின் சூத்திரத்தை உய்த்தறிக {Fe - 56, O-16}

1) FeO 2) $Fe_2O_3$ 3) $Fe_3O_4$
4) $Fe_2\ O_5$ 5) $Fe_3\ O_5$

39) 12.0 g சுண்ணாம்புக் கல்லானது 200 $cm^{-3}$, 1.0 $moldm^{-3}$ HCl (aq) உடன் பூரணமாகத் தாக்கமடையுமெனில் சுண்ணாம்புக் கல் மாதிரியிலுள்ள $CaCO_3$ இன் திணிவு நூற்றுவீதம் யாது?

1) 60% 2) 70.5 % 3) 75.5%
4) 83.33% 5) 85%

40) ஒரு கரைசல் 100g A, 20 g B, 60 g C என்பவற்றைக் கொண்டுள்ள. B,C ஆகியவற்றின் சார் மூ.கூ.திணிவுகள் முறையே 20, 12 ஆகும். C யின் மூல்ப்பின்னம் 0.5 ஆயின் A யின் சா.மூ.கூ திணிவு யாது?

1) 20 2) 30 3) 25
4) 15 5) 35

41) $^{12}C$ சமதானியின் 0.0240 g இல் உள்ள அணுக்களின் எண்ணிக்கை ஆவது

1) 12.044 x $10^{15}$ 2) 12.044 x $10^{20}$
3) 12.044 x $10^{21}$ 4) 6.022 x $10^{19}$
5) 6.022 x $10^{20}$

42) அமில ஊடகத்தில் Iron (II) oxalate இன் ஒரு மூலுடன் முற்றாகத் தாக்கம் புரிவதற்குத் தேவைப்படுகின்ற KMnO4 மூல்களின் எண்ணிக்கை ஆவது

1) 5 2) 3 3) 5/3
4) 3/5 5) 1/5

43) $K_2SO_4$, $Cr_2(SO_4)_3 12H_2O$ இன் நீர்க்கரைசலொன்று 1.04 g $dm^{-3}$ $Cr^{3+}$ அயன்களைக் கொண்டுள்ளது. இக்கரைசலில் உள்ள SO $4^{2-}$ இன் செறிவு $moldm^{-3}$ அலகில் யாது? (K - 39, Cr -52, S -32)


1) 0.01 2) 0.02 3) 0.03
4) 0.04 5) 0.05


44) $25^0$ C யில் இரசாயனரீதியில் தூய நீரில் தூய $CaCl_2$ ஐயும் தூய $Ca(OH)_2$ ஐயும் முற்றாகக் கரைப்பதன் மூலம் S எனும் கரைசலொன்று பெறப்பட்டது. S இலுள்ள ஒவ்வொரு கரையத்தின் செறிவும் 0.005 $molkdm^{-3}$ ஆகும். எனில் $OH^-$ அயனின் செறிவு யாது?

1) 2.0 2) 2. 3 3) 7.0
4) 11.7 5) 12.0

45) C,H, O ஆகியவற்றை மாத்திரம் கொண்டுள்ள சேதனச் சேர்வையொன்று திணிவு ரீதியில் 29.6% ஒட்சிசனை வைத்திருக்கின்றது. அதன் சார் மூலக்கூற்றுத் திணிவு 270 ஆகும். இச் சேதனச் சேர்வையின் மூலக்கூறொன்றில் எத்தனை ஒட்சிசன் அணுக்கள் இருக்கின்றன.


1) 1 2) 2 3) 3
4) 4 5) 5





வடக்கிற்கான புகையிரதச் சேவை வழங்கும் நோக்கில் கிளிநொச்சி நகரில் கட்டப்பட்டு வரும் புகையிரத நிலையத்தையும் தண்டவாளங்கள் பொருத்தப்படுவதையும் படங்களில் காணலாம். (90)

# சுற்றாடல் அமைச்சர் தலைமையில் கிளிநொச்சியில் சுற்றுச்சூழல் மாநாடு



கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற வட மாகாண சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் கடந்த 20 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் புதுபிக்கதக்க சக்தி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த தலைமையில் இடம்பெற்றுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இயற்கை வளங்கள் இன்றியமையாத ஒன்று எனவே இயற்கை வளங்களை பயன்படுத்துகின்ற போது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சுற்றுச்சூழல் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பயன்படுத்துதல் அவசியம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சட்டவிரோதமாக இடம்பெற்று வருகின்ற மணல், கிரவல் அகழ்வு மற்றும் மரங்கள் வெட்டுதல் போன்றன எமது பிரதேசத்தின் இயற்கை நலன்களுக்கு பெரும் சவாலாக அமைந்து வருகிறது. இந்த நடவடிக்கைகளால் பல்வேறு சுற்றுச் சூழல் பாதிப்புகள் ஏற்பட்டுவருகின்றன.

எனவே இந்த நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டு எங்களுடைய சுற்றுச் சூழல் பாதுகாப்பை பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலின் போது வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பிரதேச சபை தலைவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்நிகழ்வில் சுற்றாடல், மற்றும் புதுப்பிக்கதக்க சக்தி அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த, வட மாகாண ஆளுநர் சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, யாழ். மாநகர முதலவர் யோகேஸ்வரி பற்குணராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, சுற்றாடல், மற்றும் புதுபிக்கதக்க சக்தி அமைச்சின் செயலாளர் கிளிநொச்சி, யாழ். அரச அதிபர்கள், மததிய சுற்றாடல் அதிகார சபையின் பணிபபாளர் நாயகம், கனியவளம் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் வட மாகாணத்தைச் சேர்ந்த திணைக்களங்களின் உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(10)

## யாழ். பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக ரீதியாக நடத்தப்பட்ட தேசிய இலக்கிய கலைப்போட்டி முடிவ்கள் வெளியாகியுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

பாலர் பிரிவு
கையெழுத்துப்போட்டி

ஆன்றுபேஷி மனோகரன்- யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

கனிஷ்டபிரிவு
கட்டுரை

த.சஞ்ஜீவன் யா.புனித பத்திரிசியார் கல்லூரி, ச.மதுசன் யாழ். புனித பத்திரிசியார் கலலூரி, துளசிகா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

கவிதைப்போட்டி

கா. பார்த்திபன் யா.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுரேஜ்குமர் லோஜிதன் யாழ். வைதீஸ்வராக் கல்லூரி, ஜெ.சர்மினி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஸ்ரீபன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.

(தொடரும்)

## புதிய கலையரங்கம் அராலி வடக்கில் திறப்பு

அராலி வடக்கு சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கலையரங்கம் திறப்பு விழா இன்று மாலை 5.30 தலைவர் நாக ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஆறுதிருமுருகன், பிரதேச செயலர் சேதிநாதன் அவர்களும் சில்வஸ்ரார் விளையாடடுக் கழக உறுப்பினர்கள கலந்துகெள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றனர்.

## வாழ்க வளமுடன்

பெயர் : ஆ. அபிஷாளினி

முகவரி : கொட்டிசுட்டி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

அகவை 9 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கான பதிவும் கலந்துரையாடலும் கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. கரைச்சி, பூநகரி, கண்டாவளை , பளை பிரதேச செயலகப்பிரிவைச் சேர்ந்த 85 பேர் வருகை தந்திருந்தனர். இதில் 20 சிறு வலுவிழப்பைக் கொண்டவர்களுக்கு மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. மிகுதி 65 பேருக்கும் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமைப் பூணி மனைக்கு அழைத்துச் சென்று சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் மாற்று வலுவுள்ளோர்கள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (90)

## "பராஅத்" எனும் அதிசய இரவு

எம்மை எதிர்கொள்ள இருக்கும் 'பராஅத்' என்னும் புனித இரவுதனை மிகு ஆவலுடன் எதிர்பார்த்தவர்களாக இருக்கும் நாம் இன்னும் சில தினங்களில் ஷஃபான் மாதப்பிறை பதினைந்தாம் இரவு அதாவது (ஷஃபான் பிறை15)(24.06.2013)தனில் அடையவுள்ளோம்.

இம்மாதத்தின் பலனையும் பயனையும் அடைந்து கொள்ள எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ரமழான் மாதம்நோற்கும் நோன்பைத் தவிர மற்றய மாதத்தில் இந்த ஷஃபானில்தான் அதிக நோன்பு நோற்றுள்ளார்கள்.

இன்னும் அவர்கள் வபாத்தாகிய இறுதி ஆண்டிலே தொடர்ந்து மூன்று மாதங்கள் இதாவது றஜப், ஷஃபான், றமழானிலே நோன்பு நோற்று இதில் தனக்கும் பரக்கத் செய்ய அல்லாஹ்விடம் நாயகம் முஹம்மத் (ஸல்)துஆ செய்தார்கள் என்று அன்னை ஆயிஷா (ரபி) அவர்கள் கூறியுள்ளார்.

எனவே இந்த சிறப்புமிகு ஷஃபானிலே உள்ள நடுப்பகுதி இரவு மிகுந்த விஷேடத்துக்குரியதாகும் என்பது நாம் அறியாததல்ல காரணம் புனித ரமழான் மாதத்தில் வரும் லைலத்துல்கதர் இரவை அடுத்து மிக மதிப்புக்குரிய இரவுகளில் இதுவும் ஒன்று என்பது தெளிவு. மேலும் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதரதும் பதிவு செய்யப்படும்.

இந்நாளில் பழைய ஏடுகள் மூடப்பட்டு புதிய ஏடுகள் ஆரம்பிக்கப்படும் இந்நாளில் நாம் இறையைதொழுது பல நன்மையான செயல்களில் ஈடுபட்டு "இறைவா இன்னும் எம்மை நல்லவற்றின் பால் வழி நடத்துவாயாக" என்று பிரார்த்திக்க வேண்டும் இன்னும் "ஹழ்ரத்இப்னு உமர் ரலி) அறிவிப்பதாவது ஐந்து இரவுகளில் செய்யும் துஆக்கள் சீக்கிரமாக ஏற்றுக்கொள்ளப்படும் அதில் ஷஃபான் இரவின் நடுப்பகுதியும் என்பதாக" எனவே அல்லாஹ தன் அன்பு, கருணை, இரக்கம் போன்றதை அருளும் இவ்விரவில் அவன் அருள் கதவு திறக்கப்படுவதுடன் முந்நூறு ரஹ்மத்தின் வாயில்களும் திறக்கப்படுகின்றன.

எனவே மனித சமூகத்தின் மகத்துவமிக்க இவ்விரவை நாம் பாழாக்கி விடாது மலரப்போகும் இரவில் பல நன்மைகள்செய்து வணக்கத்தின் மூலம் துஆக்கள் மூலம் பாவமீட்சி தேடி நல்ல முடிவு அமையப் பிரார்த்திப்போம்.

மேலும் எமது இஸ்லாமிய சமூகத்தின் குறைகள் நீங்கி நாட்டில் வீட்டில் சுபீட்சம் கிடைக்கவல்ல அல்லாஹ்றப்புல் ஆலமீன் அவனை வேண்டுவோம் ஆமீன் ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்

ஏ.எம்.அஸீஸ்

# வட இந்தியாவில் கடும் மழை; 550இற்கும் மேற்பட்டோர் பலி



வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள கடுமையான மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 550 ஆக உயர்வடைந்துள்ளதுடன் 50,000 இற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உத்தராகண்ட் மாநிலத்திலுள்ள கேதர்நாத் என்ற புனித நகரமும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் மிக அதிகமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் மீட்பு பணிகளில் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகின் மிக பெரிய ஹெலிகொப்டரான என் Mi-26 மீட்புப் பணிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதேவேளை, மேலதிகமாக 55 ஹெலிகொப்டர்கள் களத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் வெள்ளம் காரணமாக பாலங்கள், சாலைகள், அடித்துச் செல்லப்பட்டிருப்பதை அடுத்து ஐம்பதாயிரம் பேர் வரையிலானோர் இதில் சிக்குண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள ஆலயங்களுக்கு யாத்திரிகர்களாக வந்த இலட்சக்கணக்கான பக்தர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இந்திய இராணுவ வீரர்கள் முன்னின்று செயற்பட்டு வரும் நிலையில் உயிருடன் மீட்கப்பட்டோருக்கு சரியான முறையில் உணவு கிடைக்காததால் பசியால் உயிரிழந்தோரின் தொகை 150 ஆக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மண்சரிவிலிருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் மலை உச்சியில் சிக்கித் தவித்தவர்கள் தங்களுக்கு எவ்வித உணவும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளனர்.

# கவர்ச்சியில் இங்கிலாந்து இளவரசியை பின்தள்ளினார் டென்மார்க் இளவரசி



இங்கிலாந்து இளவரசி கேத் மிடில்டன் தான் உலகின் மிகவும் கவர்ச்சிகரமான இளவரசியாக தேர்ந்தெடுக்கப்பட்டு வலம் வந்து கொண்டிருந்தார்.

ஆனால் தற்போது அவருடைய இடத்தை டென்மார்க்கின் இளவரசி கைப்பற்றி கேத் மிடிலடனுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

உலகின் மிகவும் கவர்ச்சியான பெண்மணியின் வரிசையில் கேத் மிடில்டனுக்கு இரண்டாவது இடமே கிடைத்துள்ளது.

டென்மார்க் இளவரசி Mary 68 சதவிகித ஓட்டுக்களை பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவருடைய பிறப்பிடம் அவுஸ்ரேலியாவாக இருந்தாலும், இவர் டென்மார்க் இளவரசியாக தற்போது உள்ளார்.

இங்கிலாந்து இளவரசி கேத் மிடில்டனுக்கு 67 சதவிகித வாககுகள் கிடைத்து இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டார்.



உலகச் செய்திகள்

# கூகுள் நிறுவனத்திற்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கை




அமெரிக்க அரசு சமீபத்தில் பிரிசம் என்னும் கண்காணிப்பு திட்டத்தை அமுல்படுத்தியது.

இத் திட்டத்தின்படி அனைத்து வாடிக்கையாளர்களின் தொலைபேசி உரையாடல்களும், இணையத்தள நடவடிக்கைகளும் பதிவு செய்யப்படுகின்றன


இதனால் அமெரிக்க உளவு நிறுவனத்திற்கு, தங்கள் நாட்டு வாடிக்கையாளர்கள் குறித்த தகவல்களை வழங்கிய கூகுள் இணையத்தளம் மீது ஐரோப்பிய நாடுகள் கடும் நடவடிக்கை எடுத்துள்ளன.

கூகுள் இணையத் தளத்தை உபயோகிக்கும் அனைத்து வாடிக்கையாளர்கள் குறித்த தகவல்களை, அமெரிக்க தேசிய உளவு நிறுவனத்திற்கு கூகுள் வழங்கியுள்ளதனால் அதிருப்தியடைந்துள்ள ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள பல நாடுகள் அந்நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க உள்ளன.

பிரான்ஸ் நாட்டு சட்டத்தை, கூகுள் இணையத்தளம் மீறியுள்ளது. இந்நிறுவனம் தன்னுடைய, தனியுரிமை கொள்கைகளை மாற்றிக் கொள்வதற்கு மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மாற்றிக் கொள்ளாவிடில், 1.2 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என பிரான்ஸ் தகவல் பாதுகாப்பு நிறுவனமான, சி.என்.ஐ.இ.எல் எச்சரித்துள்ளதோடு "கூகுள் நிறுவனத்திற்கு, 2.5 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளும், இந்த இணையத்தள நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



பாம்பன் ரயில் பாலத்தில், புதிய தண்டவாளம் பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்கள்.

# பாலஸ்தீன பிரதமரின் ராஜினாமா வாபஸ்



கடந்த 20ஆம் திகதி திடீரென ராஜினாமா பாலஸ்தீன பிரதமர் ரமி ஹம்தல்லா தனது ராஜினாமாவை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் உடனான கருத்து வேறுபாடு காரணமாக, முன்னாள் பிரதமர் சலாம் பயாத் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதனையடுத்து, இரு வாரங்களுக்கு முன்னர் ரமி ஹம்தல்லாவை புதிய பிரதமராக அதிபர் நியமித்தார். அவருக்கு துணையாக மேலும் 2 துணை பிரதமர்களும் நியமிக்கப்பட்டனர். இந்நிலையில், தனது பதவியை ரமி ஹம்தல்லா ராஜினாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஹம்தல்லா, அதிபர் மஹ்மூத் அப்பாஸை சுமார் இரண்டு மணி நேரம் நடந்த சந்திப்பின் முடிவில் அவர் தனது ராஜினாமாவை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

பாலஸ்தீன அரசியலமைப்பு சட்டத்தின் படி, அதிபர் தான் அதிக அதிகாரங்களைக் கொண்டவர்.

# பெண்களுக்கு கவர்ச்சி தேவையில்லை தன்னம்பிக்கை ஒன்றே போதும்

## லண்டன் ஆய்வில் தகவல்

லண்டன் பெண்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் மிகவும் தன்னம்பிக்கை மிகுந்தவர்கள் என்பதை வெளிப்படுத்தவே விரும்புகின்றனர் என, பிரிட்டன் ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள வர்த்தக சேனல் ஒன்று, சமீபத்தில், பெணகளின் விருப்பம் தொடர்பான கருத்துக் கணிப்பை நடத்தியது. இதில்,அழகு, கவர்ச்சி போன்றவற்றை விட, தாங்கள் மிகவும் தன்னம்பிக்கை மிக்கவர்கள் என்பதையே பெண்கள் விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது. தாங்கள் பெண்கள் என்ற பெருமை, 52 சதவீத பெண்களிடம் உள்ளது. அதுபோல், கவர்ச்சிக்கு, 22 சதவீத பெண்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். புத்திக் கூர்மையுடன் திகழ வேண்டும் என, 12 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். சிவப்பு தோலுடன் திகழ வேண்டும் என, 36 சதவீதம் பேரும், அழகான புருவங்கள் இருக்க வேண்டும் என, 26 சதவீதம் பேரும், இளம் சிவபபான கன்னங்கள் இருக்க வேண்டும் என, 17 சதவீதம் பேரும், உதடுகள் சிவப்பாக இருக்க வேண்டும் என, 14 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, பிரிட்டனின் பாடகரும், பாடல் ஆசிரியருமான, ஜெஸ்சி சூறுகையில், இந்தக் கருத்துக் கணிப்பு, மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்,



தாங்கள் மிகவும் தன்னம்பிக்கை மிக்கவர் என்பதற்கே அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது தெரிகிறது, எனத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தன்னம்பிக்கை மிகுந்தவராக தங்களைக்காட்டிக கொள்ள, அதிக ஒப்பனை தேவையில்லை இயற்கையாக நம் சுபாவப்படி நாம் நடந்து கொள்ளலாம். இதில், தவறு எதுவும் இல்லை என, 77 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தானியர்களின் கறுப்புப்பணம் சுவிர்சர்லாந்தில் பதுக்கல்

சுவிட்சர்லாந்து மத்திய வங்கி ஆண்டறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி தற்போது இந்தியர்களை விட பாகிஸ்தானியர்கள் அங்கு அதிக அளவில் கறுப்பு பணம் முதலீடு செய்துள்ளது தெரிய வந்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களின் ஒட்டு மொத்த முதலீடு ரூ.9200 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்தியர்களின் கறுப்பு பண முதலீட்டை விட அதிகமாகும். ஏனெனில் இந்தியர்களின் முதலீடு 9 ஆயிரம் கோடியாக உள்ளது. மக்கள் தொகை




மற்றும் நிலப்பரப்பு அடிப்படையில் இந்தியாவை விட பாகிஸ்தான் மிகச் சிறிய நாடு. இருந்தாலும், அது கறுப்பு பண முதலீட்டில் இந்தியாவை மிஞ்சி நிற்கிறது. இருந்தாலும் இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில பாகிஸ்தானியர்களின் முதலீடு 32 சதவீதம் குறைவாகும்.

# பக்தர் வெள்ளம் கரைபுரண்டோட நயினை நாகபூஷணிக்கு இரதோற்சவம்

## திருட்டுச் சம்பவங்கள் இம்முறை குறைவு



(வேலணை)

பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் இரதோற்சவம் நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் இரதோற்சவம் ஆரம்பமானது. பெருந்திரளான அடியவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

அடியார்களது போக்குவரத்து வசதிகளை கருத்தில் கொண்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையினர் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து அதிகளவில் பஸ் சேவைகளை குறிகாட்டுவான் இறங்குதுறை வரை நடத்தியிருந்தனர்.

அதேபோன்று தீவக தனியார் சிற்றூர்த்திச் சங்கத்தினரும் அதிகளவில் பஸ் சேவைகளை நடத்தினர். நயினாதீவு குறிகாட்டுவான் இறங்கு துறைக்குமிடையில் சுமார் 50 இற்கு மேற்பட்ட படகுகளும் சேவையில் ஈடுபட்டிருந்தன.


ஆலய உள்வீதி, வெளிவீதி மற்றும் ஆலயச் சூழல்களில் அதிகளவில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அமுதசுரபி அன்னதான சபையினரும் இரவு, பகலாக தொடர்ந்தும் அடியார்களுக்கு அன்னதானங்களை வழங்கி வந்துள்ளனர்.

யாழ்.பண்ணை, வேலணை வங்களாவடி முருகன் கோவிலடி, குறிகாட்டுவான் ஆகிய இடங்களிலும் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு தாக சாந்திகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேநேரத்தில் ஆலயத்தின் உள்வீதியில் நின்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க நகை ஒன்று திருடப்பட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று அன்னதானத்திற்குச் சென்று வரிசையில் நின்ற பெண் ஒருவரினது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ஒன்றினை அறுத்த நிலையில் அந்தப் பெண் உடனடியாக சங்கிலியைப் பிடித்துக் கொண்டதால் சங்கிலியைக் கைப்பற்றியதுடன், பிரஸ்தாப பெண்ணை பொலிஸில் ஒப்படைத்தாகவும் கூறப்படுகின்றது.

மேலும் ஆலய வளாகத்தில் ஒருவர் கஞ்சா வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருட இரதோற்சவத்தன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டதுடன், அதிகமான யாத்திரிகர்கள் வந்திருப்பது பதிவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆலய வீதி களிலும், இறங்கு துறைகளி லும் இலங்கை செஞ்சிலு வைச் சங்கத்தின் வேலணைப் பிரிவுக்கிளை, பரியோவான் முதலுதவிப் படை, சாரணர், தொண்டர்கள், இலங்கை முதலுதவிச் சங்கம் மற்றும் கடற்படையினர், பொலிஸார் ஆகியோரும் மக்களுக்கான உதவிகளைச் செய்ததனையும் அவதானிக்க முடிந்தது. (05)



பொலிகண்டி கல்யாணவேலவன் ஆலய இரதோற்சவம் நேற்று இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் புடைசூழ தேர் வலம் வருவதைக் காணலாம். (116)

## அறநெறிப் பரீட்சைக்காக மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை 2013 செப்ரெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நாடு முழுவதும் நடத்தப்படவுள்ளது.

தமிழ் மொழியில் நடைபெறும் இப் பரீட்சை இந்து அற நெறிப் பாடசாலையின் மேற்பிரிவு மாணவர்களுக்கானதாகும். இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி எதிர்வரும் யூலை மாதம் 21 ஆம் திகதியாகும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைப் பயிலுநர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைக் கட்டணம், பரீட்சை முறை, விடைத்தாள்களை மீள்பரிசீலணை செய்தல் போன்ற விபரங்களை கடந்த 21 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியல் பார்வையிட முடியும்.

இப்பரீட்சையில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## பொதுபலசேனாவுக்கு எதிராக கிறிஸ்தவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

களுத்துறையில் மக்கொனை என்ற இடத்தில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பௌத்த கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனாவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

மக்கோனை லக்கல குமார கந்தையிலுள்ள தேவாலயத்துக்குரிய மாதா திருச்சொரூபத்திற்கு முன்னால் இருந்த சந்திரவட்டக்கல் வடிவத்திலான வாசற்படியை இரண்டு தினங்களுக்கு முன்னர் சிலர் அங்கிருந்து பலவந்தமாக அகற்றிச் சென்றுள்ளனர்.

அந்த சம்பவத்துக்கு எதிராக கிறிஸ்தவ- மக்கள் நேற்றுக் காலை முதல் நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, அந்தப் பிரதேசத்தில் நிலவிய பெரும் பதற்றம் காரணமாக பொலிஸாரும் உயர் அதிகாரிகளும் சிறப்பு அதிரடிப் படையினரும் அங்கு வரவழைக்கப்பட்டனர்.

பின்னர் சந்திரவட்டக்கல்லை அகற்றியவர்கள் தேவாலய நிர்வாகத்திடம் மன்னிப்பு கோரிய பின்னரே ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றதாக ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

சந்திரவட்டக்கல் என்பது அரசர்கள் காலத்திலிருந்து இருந்து வருகின்ற நாட்டின் பாரம்பரிய கலை வடிவம். அது பௌத்த மதத்துக்கு மட்டும் உரியது அல்ல. அது இந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் உரிய எங்களின் பாரம்பரிய உரிமை.அதனை அகற்றிச் சென்றுவிட்டது மட்டுமன்றி அங்கிருந்த கத்தோலிக்க மதகுருமாரையும் அவர்கள் கேவலகமாக பேசியிருந்தார்கள். அதற்கு எதிராகத் தான் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறோம் என்றார் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர்.

சந்திரவட்டக்கல் வாசற்படியை பெயர்த்து எடுத்துச் செல்ல பொதுபலசேனா பிக்குமார் பொலிசாருடன் தான் வந்திருந்தார்கள். பொலிசார் அதனை பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள் என்றும் அவர் கூறினார்.

## 26 ஆயிரம்....

ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 324 பேருக்கும், 2010 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 505 பேருக்கும், 2011 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 588 பேருக்குமாக மொத்தம் 26 ஆயிரத்து 404 சீனப் பிரஜைகளுக்கு தொழில் நுழை விசா வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் திட்டங்களை மேற்கொள்ளும் சீன நிறுவனங்களின் பரிந்துரைப்படியே இவர்களுக்கு நுழை விசா வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இவர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் சீனாவுக்கே திரும்பிச் சென்றுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் துறைமுகம், விமான நிலையம், அனல் மின் நிலையம், நெடுஞ்சாலைகள், தொடருந்துப் பாதைகள் போன்றவற்றை அமைக்கும் திட்டங்களைப் பொறுப்பேற்ற சீன நிறுவனங்கள் அதற்கான தொழிலாளர்களை தமது நாட்டில் இருந்தே கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் விலை நாளாந்தம் சரிவு

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த சில மாதங்களாக தேங்காய்க்கு நல்ல கிராக்கி நிலவிய நிலையில், ஒரு தேங்காய் 45 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது ஒரு தேங்காய் 30 ரூபா வரை வீழ்ச்சியடைந்துள்ளது. நாளாந்தம் தேங்காயின் விலை சரிவடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. (150)

## மாத்தளை...

குற்றம் சுமத்தியுள்ளனர். 1988 - 89 காலப்பகுதியில் மாத்தளையில் காணாமற் போனோரின் குடும்பத்தினர் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடி வரும் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ பி.பி.சி தமிழோசையிடம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பில் மக்கள் நன்கறிவார்கள் என்றும், பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காகவே இத்தகைய ஆணைக்குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள் ள்ார். அரசாங்கத்தில் தற்போது செல்வாக்குள்ள உயர்பீடத்தில் இருக்கின்ற நபரே, மாத்தளை மனிதப் புதைகுழிக்குரிய காலம் என்று மதிப்பிடப்பட் டுள்ள காலத்தில் அங்கு இராணுவப் பொறுப்பில் இருந்துள் ளதாகவும் சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்கள் மத்தியில் வலுப்பெற்று வரும் நிலையில், இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் நீதிபதியை வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## நடைமுறைச்...

அதையே சொல்லியும் வருகின்றோம் என்பதுடன், எதிர்வரும் காலங்களில் மக்கள் சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் பட்சத்தில் அதனூடாக எமது பகுதிகள் அபிவிருத்தியில் முன்னேற்றம் காண முடியுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, ஈ.பி.டி. பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மஹா கும்பாபிஷேகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி (வயலூர்) அருள்மிகு ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று தள இராஜகோபுரத்திற்கான மஹாகும்பாபிஷேக பெரும் சாந்தி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை எண்ணெய்க்காப்பு வைபவமும் நடைபெறும். (21)

## மாகாண...

இவர்கள் மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்த மாணவியின் சாதனை பாடசாலைக்குப் புகழைத் தேடித்தந்துள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## சமூக அபிவிருத்தி....

ந்த எஸ்.பிரபாகரன் கண்டாவளை பிரதேச செயலகத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் ஏற்கனவே குறித்த அலுவலகங்களில் பட்டதாரி பயிலுநர்களாக கடமையாற்றிய நிலையில் தற்போது நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 67 வீத சனத்தொகையைக் கொண்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்கு சமூக அபிவிருத்தி அலுவலர் நியமனம் செய்யப்படாமை குறிப்பிடத்தக்கது. (90)

# தெரிவுக்குழுவில் பங்கேற்பதா?

# விரைவில் முடிவு என்கிறார் சம்பந்தன்



இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக அரசு நியமித்திருக்கும் தெரிவுக்குழுவில் பங்கேற்பது தொடர்பில் தமிழத் தேசியக்கூட்டமைப்பு இன்னமும் எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தர் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் 19 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அரசு நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

இந்த தெரிவுக்குழுவில் சேரும்படி தமிழத்தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு வந்ததாகவும், ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் இந்தியா செல்வதற்கு முன்பாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்த சம்பந்தன், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் வெளிநாடுகளில் இருப்பதால் இது குறித்து எந்த முடிவும் எட்டப்படவில்லை என்றும் கூறினார்.

வெளிநாட்டில் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் இலங்கை திரும்பிய பிறகு, எல்லோரும் கலந்துபேசி இந்த தெரிவுக்குழு தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை தாங்கள் எடுக்கவிருப்பதாகவும் சம்பந்தர் தெரிவித்தார்.

இந்திய பயணத்தின் போது இலங்கை அரசின் இந்த தெரிவுக்குழு குறித்து இந்திய அரசிடம் தாங்கள் முக்கியத்துவம் கொடுத்து பேசவில்லை என்று கூறிய சம்பந்தர், பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் தொடர்பாகவே இந்தியப் பிரதமர் உள்ளிட்ட இந்திய தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் விரிவாக பேசியதாகவும் கூறினார்.

# மீன்பிடிப் படகுகள் மாதகலில் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாதகல் பகுதியில் மீனவர்களின் மூன்று மீன்பிடிப் படகுகள் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாதகல் கடற்கரையில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் கட்டப்பட்டிருந்த இரண்டு படகும் கடலில் நின்ற ஒரு படகும் இவ்வாறு எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

இதில் படகு மற்றும் இதிலிருந்த வலைகள் உட்பட பல இலட்சம்பெறுமதியான வலைகள் என 25 இலட்சத்திற்கும் மேல் பெறுமதியானவை எரிந்துபோயுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்வத்துடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (02)

# பணிப்பெண்களின் குடும்ப விபரம் கட்டாயம்

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிபுரியச் செல்கின்ற பெண்கள் தங்களின் குடும்ப விபரங்களை கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டுமென வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை ஜுலை 15 ஆம் திகதிமுதல் அமுலுக்கு வருமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இந்நடைமுறைக்கான சுற்றறிக்கை இன்னும் சில தினங்களில் உத்தியோகபூர்வமாக வெளியிடப் படுமெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்திய - இலங்கை உடன்படிக்கை மீளவும் உயிரூட்ட காரணமென்ன?

## விளக்குகிறது 'திவயின'

இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்குவதற்காகவே இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு மீண்டும் உயிரூட்டுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய அரசியல் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக திவயின தெரிவித்துள்ளது.

வடக்கில் உள்ள இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கப் போவதில்லை என அரசாங்கத்தின் உயர்மட்டத் தரப்பூத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் 2.9 ஆவது ஷரத்திற்கு அமைய வடக்கில் உள்ள இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் எந்த நாட்டுடனும் இணக்கப்பாடுகளை மேற்கொள்ளப் போவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என திவயின மேலும் தெரிவித்துள்ளது.

# நயினை பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கல்



(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவையொட்டி நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபையினரால் நேற்றையதினம் காலை ஆலயத்திற்கு வருகை தந்த அடியார்களுக்கு பிளாஸ்டிக் டப்பாக்களில் பொதி செய்யப்பட்ட அருட்பிரசாதத்தை மிகவும் சிறப்பான முறையில் தயாரித்து வழங்கியுள்ளார்கள்.

இந்த பிளாஸ்டிக் டப்பாக்களில் பொதி செய்யப்பட்ட அருட்பிரசாதத்தை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து சகல அடியார்களுக்கும் இந்த பிரசாதம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (05)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு மாணிக்கம்



மருதபுரம் காரைநகரை பிறப்பிடமாகவும், ஆயிலி காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு மாணிக்கம் என்பவர் 19.06.2013 புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் கந்தையா கதிரவேலுவின் அன்பு மனைவியும், வேலன் செல்லாச்சியின் அன்பு மகளும், பொன்னுத்துரை, கணேசன், யோகம்மா காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரியும், தேவி, சந்திரன், கலஞ்சென்ற பரிமளம் ஆகியோரின் பாசமிகு மைத்துணியும், இந்திராணி, இரத்தினசிங்கம், அரசரத்தினம், குணரத்தினம் (லண்டன்), ஜெயந்திமலர் (லண்டன்), காலஞ்சென்ற தருமரத்தினம், லலிதாதேவி, பத்மினிதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், மதிவதனா, விஜயலட்சுமி, ராதா (இந்தியா), அமுதா, இந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜஸ்வரி, லோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன், அஜந்தா, பயூட்டிகா, பியூடீசன், அபிசன், வினோதா, கபில்ராஜ், ஷோபனா, ரவிராஜ், வேணுராஜ், கோபி, சுயாத்தா, கயல்விளி, தயரூபன், தனுசியா, றம்மியா, துஜிபா, மொரிஸ், டொனிஸ், பாலகிருஸ்ணன், பாலகுமார், காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு பேத்தியும், சஜிதா, கம்சாயினி, ரிஷி ஜஸ்மிகா, ஜஸ்விகா, கனிஸ்கா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 23.06.2013 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணியளவில் தகனக்கிரிகைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மருதபுரம் காரைநகர்.**

தகவல்:- **குடும்பத்தினர்** (இ)

# கிழக்கிலும் முதலிடுவதற்கு சீன நிறுவனங்கள் முன்மொழிவு

(கொழும்பு)

இலங்கை மேலும் பத்துத் திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பான முன்மொழிவுகளை, இலங்கை முதலீட்டுச் சபையிடம் சீன நிறுவனங்கள் கையளித்துள்ளதாக இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன இந்தத் தகவலை கொழும்பில் செய்தி யாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்கள் அனைத்தும், கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கானதாகும்.

உருக்குத் தொழிற்சாலை, தகவல் தொழில்நுட்ப பூங்கா, மோட்டார் வாகன ஒருங்கிணைப்புத் தொழிலகம் என்பனவற்றை அமைப்பதற்கான திட்டங்களும் இவற்றில் அடங்கியுள்ளன.

மேலும், மூலிகை அழகு சாதன பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் திட்டங்களில் பெரும்பாலானவை, 25 மில்லியன் தொடக்கம், 50 மில்லியன் டொலர் வரையிலான முதலீட்டைக் கொண்ட சிறுதொழில் முயற்சிகளே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சம்பூரில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கனரக தொழில்துறைக்கான சிறப்பு வலயம் ஒன்றை உருவாக்கவே அமைச்சரவை இந்த அனுமதியை அளித்துள்ளது.

# ஊடகங்களுக்கு அதிகாரம் உள்ளது என்கிறார் ரணில்


(கொழும்பு)

ஊடகங்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என யாரும் கூற வேண்டிய அவசியம் இல்லை எனவும் ஊடகங்களுக்கு அதிகாரம் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என சொல்பவர்கள் ஊடகங்களின் அதிகாரங்களைப் பறித்தவர்களே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.தே.க.வின் புதிய யாப்பு வரைபு நேற்றைய தினம் தேரர்களிடம் கையளிக்கப்பட்டது.

கோட்டே ஸ்ரீ கல்யாணி ஸ்ரீ தர்ம மகா சங்க சபையின் மகா நாயக்க அங்கமகா பண்டித்த பெல்லன ஸ்ரீ தோனவிமல தேரரிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கொள்ளுபிட்டி வாலுக்காராமயில் வைத்து நேற்றுக் காலை புதிய யாப்பு வரைபை கையளித்தார்.



நாட்டின் அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும் எனவும் அதில் குறைகள் பல காணப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தேரரிடம் தெரிவித்துள்ளார்.

அதனால் புதிய யாப்பு வரைபு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் எனவும் அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ நீர்கொழும்பு மக்களுக்கு தெளிவுபடுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.